பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 15 செவ்வாய்க்கிழமை 29.06.2021 கதிர் 236

**இனி இது ரகசியம் அல்ல!**

சீனாவின் பரோபாகாரத்தில் தான் நாடே ஓடுகின்றது என்பது வாஸ்தவம்தான். சீனா விரிக்கும் கடன் வலையில் இலங்கை மெல்லமெல்ல வசமாக சிக்கிக் கொண்டு வருகின்றது என்பதும் உண்மை தான்.

உலக நாடுகளிடம் பக்கம்02

# சீன ஆதிக்கத்துக்கு உடன் முடிவு கட்டப்பட வேண்டும்

## கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் வலியுறுத்து



வடக்கிலும் சீன ஆதிக்கம் தலைவிரித்தாடுகின்றது. இதற்கு விரைவில் முடிவுகட்டப்பட வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 2

## 41 பேர் சாவு!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 41 உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 24 ஆண்களும், 17 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் 2

## 1,850 பேருக்கு நேற்று தொற்று

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,850 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2

## குடாநாட்டில் நேற்று 9,988 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸ்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசி இரண்டாவது டோஸ் வழங்கும் பணியில் மாலை வரை 9 ஆயிரத்து 988 பேர் பெற்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசி மருந்துகள் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு கடந்த மே மாத இறுதியில் கிடைக்கப்பெற்றன. இவை சுகாதார அமைச்சின் தொற்றுநோய் 2

## யாழில் 5 ஆயிரத்தைத் தாண்டிய தொற்றாளர்களின் எண்ணிக்கை



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைக் கடந்துள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா 2

## துமிந்த வெளியே; ஹிருணிகாவை பாதுகாக்கவும்!

### பொன்சேகா வேண்டுகோள்

ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் அவரின் தயாருக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மாஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்று 2

## யாழில் நேற்று மூவரை சாகடித்த கொரோனா!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 29

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று நால்வர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான 91 வயதுடைய யோசேப் புளோரன்ஸ், 78 வயதுடைய சின்னத்தம்பி சின்னப்பு மற்றும் யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் 86 வயதுடைய அ.அருளப்பு ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 74 வயதுடைய சண்முகம் செல்லம்மாவும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

## அளவெட்டியில் அதிகாலை வாள் வெட்டு; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் அளவெட்டி பகுதியில் நேற்று அதிகாலை வீடொன்றினுள் புகுந்த வாள் வெட்டுக்குழு வீட்டில் இருந்த இளைஞர் மீது வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

அளவெட்டி மேற்கு பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை புகுந்த வாள் வெட்டுக் கும்பல் வீட்டில் இருந்த பொருள்களை அடித்துநொறுக்கி அட்டகாசம்புரிந்து வீட்டில் இருந்த இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பி சென்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். 2

## எம்.பியாகும் வேண்டுகோளை பஸில் நிராகரிக்கவே முடியாது

### இந்தத் தடவை நாடாளுமன்றம் வந்தே ஆகவேண்டும் என்று சாகர வலியுறுத்து



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற வர வேண்டும் என்று இம்முறை தாம் முன்வைக்கும் கோரிக்கையை அவரால் நிராகரிக்க முடியாது என்று கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 2

## நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மேலும் நால்வருக்குக் கொரோனா

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 34 உத்தியோகத்தர்களிடம் மேலும் முன்னெக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் நால்வருக்குக்கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று முன்தினம் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்று பி.சி.ஆர். மாதிரிகளை வழங்கியிருந்தார்.

அவற்றில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பொறுப்பதிகாரிக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 34 உத்தியோகத்தர்களிடம் நேற்று அன்டிஜன் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கையேந்தி இதுவரை பெற்ற பல லட்சம் கோடி ரூபா கடனை இறுக்க முடியாத இலங்கை, கடன் தவணைக் கட்டணத்தை செலுத்த முடியாமல் – கடன்செலுத்த இயலாத தோல்வியுற்ற நாடாக – அறிவிக்கப்படுவதினின்றும் நாட்டை காப்பாற்றி வருவதும் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு சீனா அவ்வப்போது வழங்கும் புதிய புதிய கடன்கள்தான்.

இப்படிக் கடன் வலைக்குள் வசமாக நம்மை மாட்டி வரும் சீனாவுக்கு புதிய வகையில் தனது நன்றியுணர்வைக் காட்ட முனைகின்றது கொழும்பு அரசு. எப்படித் தெரியுமா?

சீனாவை ஆட்சி செய்யும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டு நூற்றாண்டு இது. அதனைப் பெருமைப்படுத்தும் விதத்தில் இலங்கையில் புதிய நாணயக் குற்றிகளை வெளியிடப் போகின்றது இலங்கை அரசு. இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – இன்னொரு நாட்டுக்கு நன்றி பகிர்வதற்காக அந்த நாடு தொடர்பில் இலங்கையில் நாணயக்குற்றி வெளியிடப்படுவது இதுதான் முதல் தடவை. அது மட்டுமல்ல, அந்த நாட்டினதோ, அந்த நாட்டினது அரசினதோ கொண்டாட்டம் அல்ல இது. அந்த நாட்டை ஆளும் அரசியல் கட்சியின் நூற்றாண்டு விழா. அதற்கு ஏன் இலங்கை அரசு நாணயக்குற்றி அச்சிட வேண்டும் என்ற கேள்வி எழுவது நியாயம்தான்.

அடுத்தது – அந்த நாணயக்குற்றிகளை அச்சிட்டு அல்லது உற்பத்தி செய்து வழங்கப்போவதே சீனா தான். அதனை ஏற்று தனது குற்றியாக புழக்கத்திற்கு விடப்போகின்றது இலங்கை.

சீனாவிடம் எதற்கும் கை நீட்டும் இலங்கை அதற்காக சீனா எதிர்பார்க்கும் எல்லாவற்றுக்கும் கட்டுப்பட வேண்டிய கட்டாயம்.

கம்பராமாயணத்தில் இந்த அடி உண்மையில் இல்லை. ஆனால் பேச்சு வழக்கில் உள்ளது. அது கனகச்சிதமாக நமது அரசுக்குப் பொருந்துகின்றது.

'கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்'....!

★ ★ ★

இதற்கு முந்திய வாரத்தில் தொடர்ந்து நடைமுறையில் இருந்த பயணக்கட்டுப்பாட்டு இறுக்கம் தளர்த்தப்பட்டபோது, மக்கள் பல இடங்களிலும் கூடினர். சந்தைகள், மளிகைக்கடைகள், மதுபான சாலைகள் முன்னிலையில், சமூக இடைவெளி பேணி நீண்ட வரிசையில் மக்கள் கூடியிருந்தமையை படங்களுடன் பல ஊடகங்களும் வெளிப்படுத்தின.

ஆங்கில வார இதழ் ஒன்று இதில் வித்தியாசமான ஒரு விடயத்தைக் கையாண்டது. கொழும்பை அண்டிய இரண்டு, மூன்று பிரதேசங்களில் அடகுகடைகள் மற்றும் வங்கிகள் முன்னால் தத்தமது நகைகளை அடகு வைப்பதற்கு நீண்ட வரிசையில் கூடிய மக்களைப் படம் பிடித்து பிரசுரித்தமையோடு, அப்படி வரிசையில் காத்திருந்த மக்களின் உள்ளத்து உணர்வுகளையும் பேட்டி கண்டு குறிப்புகளாக வெளியிட்டிருந்தது.

பெரும்பாலானோர், அடகு வைத்த நகைகளை எடுக்க வரவில்லை. புதிதாக அடகு வைக்க வந்திருந்தனர். எல்லோர் வீடுகளிலும் கொரோனா நெருக்கடியால் பிரச்சினை. பலர் வேறு வழியில்லாதமையால் தங்கள் திருமண மோதிரங்களைக் கூட அடகு வைக்கக் கொண்டு வந்திருந்தனர் என்ற தகவலும் அதில் இடம் பெற்றிருந்தது.

அடகு வைத்து பணம் புரட்டி உடனடிப் பிரச்சினையை தீர்த்து விடலாம். அடகு மீட்பது எப்போது?எப்படி? – அடகு வைக்க வந்திருந்த பலரின் மனதையும் குடைந்த கேள்வி இதுதான்.

நாட்டின் நிதி மற்றும் நிலையை விவரிக்க அடகுக்கடை முன் கூடிய மக்கள் கூட்டத்தின் காட்சி போதும். சாதாரண விளிம்பு நிலை சராசரிக் குடும்பத்தின் நிலைமை இதுதான்.

★ ★ ★

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும், மூன்று இராஜாங்க அமைச்சர்களும் (இந்திகாஅனுருத்த, றொஷான் ரணசிங்க, தேனுகா விதான கமகே) நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு நேற்று அதிகாலை கொழும்பை சென்றடைந்தனர் என்று ஒரு செய்தி தெரிவித்தது.

அப்படி என்ன வாகனத்தில் பயணம் செய்தனர் என்று விசாரித்தப் பார்தேன். ஆச்சரியமாக இருந்தது. அசோக் லெய்லாண்ட் பஸ்ஸில் வந்து அதிலேயே திரும்பியிருக்கிறார்கள்.

நமது கொழும்பு பயணிகளின் சிரமங்களை நேரில் பார்த்திருப்பார்கள். நல்லது.

அமைச்சர் நாமலின் விசிட்டும் அன்றைய தினம் நான் எழுதிய என் இந்தப் பத்திச் செய்தியும் உள்ளூரில் சில அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. எனது பத்தியின் தகவலை நடத்தைகளில் மூடி மறைத்துக் காட்டுவதற்குப் பகீரதப் பிரேயத்தனங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதில் சுவையான தகவல்களும் உள்ளன. பிறிதொரு சமயத்தில் அந்த விவரங்களைப் பார்ப்போம்.

– மின்னல் –

---

## சீன ஆதிக்கத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சிமாவட்டம், பூநகரி, கௌதாரி முனை கடல் பரப்பில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபடும் சீன நிறுவனம் தொடர்பில் ஆராய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோர் நேற்று குறித்த பகுதிக்குச் சென்றிருந்தனர். இதன்பின்னர் ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட சுமந்திரன் எம்.பி., மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கில் சீன நிறுவனம் கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

குறித்த விடயத்தை பார்ப்பதற்காக நாங்கள் சென்றிருந்தோம். குறித்த அமைவிடம் மக்களுக்குத் தெரியாத மறைவிடமாக அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தினர் அரியாலையில் தமது அலுவலகத்தை வைத்துள்ளனர் என்ற விபரத்தையும் நாங்கள் சேகரித்துள்ளோம். சட்டவிரோதமான அனுமதி கடற்றொழில் அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு ஒருவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு அப்பால், இந்த நாட்டிலே சீன ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சியாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

இதேவேளை, குடத்தனையில் உள்ள எனது வீட்டுக்குச் சென்று திரும்புகின்ற போது வீதி அபிவிருத்திப் பணிகளில் சீனர்கள் நின்றார்கள். நான் படம் எடுத்து வைத்துள்ளேன்.

வீதி வேலை செய்வதற்குத் தொழிலாளிகள்கூட எங்கள் ஊரில் எடுக்காமல் சீனாவிலிருந்து இறக்குமதி செய்கின்றார்கள்.

எங்கள் மக்களுடைய கடல் வளத்தைச் சுரண்டுவதும், கடலட்டைகள் பிடிப்பது தொடர்பிலும் பல தடவைகள் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன.

வெளி இடங்களிலிருந்து வந்து தொழிலை செய்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைத்தார்கள். இப்போது வெளி இடங்கள் என்று சொல்வதற்கு அப்பால் வெளிநாடுகளிலிருந்து இதற்கென்று ஆட்கள் வருவிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பின்னணிகளை வெகு விரைவிலே நாங்கள் வெளிப்படுத்துவோம் – என்றார்.

---

## யாழில் 5 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைமையை அவதானிக்கும்போது இன்று (நேற்று) மாலை வரை யாழ்ப்பாணத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அதேவேளை, 87 கொரோரானா மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 4 ஆயிரத்து குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 793 நபர்கள் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சாவற்காடு கிராம அலுவலர் பிரிவும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/69 மற்றும் ஜே,71 கிராம அலுவலர் பிரிவும் மற்றும் கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கரணவாய் பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

4 ஆயிரத்து150 பேர் குணமடைந்து வீடுதிரும்பினர். மிகுதியானவர்கள் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 8 ஆயிரத்து 297 குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபா உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்துக்குக் கிடைத்துள்ள மேலும் 50 ஆயிரத்து தடுப்பூசிகள், முதலாம் டோஸ் பெற்றவர்களுக்கு இன்று (நேற்று) தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது .

முதலாம் டோஸ் பெற்ற நிலையங்களுக்குச் சென்று இரண்டாம் டோஸை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய சகல பிரதேசங்களிலும் தடுப்பூசி போடும் பணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும் – என்றார்.

---

## துமிந்த வெளியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கையிலேயே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

துமிந்த சில்வா ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வெளியில் வந்துள்ளார். இது தொடர்பில் எனக்குப் பிரச்சினை கிடையாது. ஆனால், நீதியை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளது. நீதி உரிய வகையில் செயற்படுத்தப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுகின்றது.

ஹிருணிகாவின் உயிர் பாதுகாப்புக்கான பொறுப்பை ஜனாதிபதி ஏற்க வேண்டும். அவருக்குத் தேவையான பாதுகாப்பை அரசு வழங்கவேண்டும். ஹிருணிகாவின் தாய் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டும் – என்றார்.

---

## குடாநாட்டில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவின் வழிகாட்டலுக்கமைவாக கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையின் முன்னிலை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டன.

அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்ற பொதுமக்களுக்கு இரண்டாவது டோஸை வழங்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் 2ஆம் திகதிவரை இரண்டாவது டோஸ் வழங்கும் பணி முன்னெடுக்கப்படுகின்றது.

முதல் நாளான நேற்று 9 ஆயிரத்து 988 பேர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெற்றுள்ளனர்.

## 1, 850 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2 இலட்சத்து 55 ஆயிரத்து 468 ஆக எகிறியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 21 ஆயிரத்து 249 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 234 ஆக அதிகரித்துள்ளது.

---

## 41 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 985 ஆக அதிகரித்துள்ளது.

---

## நெல்லியடி பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

---

## அளவெட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

## எம்.பியாகும் வேண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

'பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்கு நீங்கள் ஏன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறீர்கள்?' என்று சாகர காரியவசமிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ பொதுஜன முன்னணி கட்சியை ஆட்சிப்பீடம் ஏற்றச் செய்ததில் பெரும் பங்காற்றியவர் எனவும், அவர் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும் என சாகர காரியவசம் இதன்போது பதிலளித்தார்.

பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு அவசியமான தருணத்தில் பெரும் பங்களிப்புகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கை கட்சி உறுப்பினர்கள் மற்றும் மக்களிடையே ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பஸில் நாடாளுமன்றம் வருவதானால் தமது ஆசனத்தை விட்டுத் தருவதாகக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு –**
மின்னஞ்சல் – kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
**076 443 8622**

# ஏறாவூர் பிரதேச செயலர் உடனடியாக இடமாற்றம்

மட்டக்களப்பு - ஏறாவூர்பற்று பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய வில்வரெட்னம் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு உடனடியாக இடமாற்றப்பட்டுள்ளார் என மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகத் தற்காலிகமாக கிரான் பிரதேச செயலாளர் இணைக்கப்பட்டுள்ளார்.

செங்கலடி பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ந.வில்வரெட்னம் தொடர்பில் பெண்ணொருவர் வழங்கிய பாலியல் முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் மீதான விசாரணை நடைபெற்று வரும் நிலையில், இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த பிரதேச செயலாளர், அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறச்சென்ற பெண்ணிடம் பாலியல் லஞ்சம் கோரியிருந்தார் எனக் குறித்த பெண் வெளியிட்ட தகவல்களும், குறித்த பெண்ணிடம் பிரதேச செயலாளர் உரையாடிய குறுஞ்செய்தி உரையாடல்களும் சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் வெளிவந்திருந்தன.

இது தொடர்பில் குறித்த பெண்ணால் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், பொது நிர்வாக திணைக்களம், ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றிற்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் உள்நாட்டலுவல்கள் பொது நிர்வாக அமைச்சின் அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்து குறித்த பெண் உட்பட மூவரிடம் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த பிரதேச செயலாளரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுப்பதற்கான தேவையிருப்பதாகக் கருதப்பட்டு அவரை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இனத்தையும் மண்ணையும் மீட்க எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயார்

## ரெலோ தலைவர் செல்வம் உறுதி

இனத்தையும், மண்ணையும் காப்பதற்கான ஒற்றுமை வலுவாக வேண்டும். அதற்குத் தமிழீழ விடுதலை இயக்கம் எந்தவிதமான விட்டுக்கொடுப்பையும் செய்வதற்குத் தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ரெலோவின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த சூம் கலந்துரையாடல் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வடக்கு கிழக்கில் இலங்கை அரசாங்கம் ஒரு மோசமான செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. மாகாண சபையின் அதிகாரங்களைப் பறித்து, நிலங்களை அபகரித்து பூர்வீகத்தைச் சிதைக்கும் செயற்பாட்டை இலங்கை அரசு முன்னெடுத்து வருகின்றது.

அது எமது மக்களிடத்திலும், மண்ணிலும் ஓர் அபாயகரமான நிலைமையை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றது. இதற்கு நாம் தடைபோடவில்லை என்றால் நிச்சயமாக இராணுவ அடக்குமுறையினூடாக எமது தேசத்தின் வரலாற்றைச் சிதைக்கும் செயற்பாட்டை அவர்கள் செய்து முடிப்பார்கள். அதனை முறியடிக்க வேண்டும் என்றால் எங்களுக்குள் ஓர் ஒற்றுமை வேண்டும்.

அந்த ஒற்றுமையை வலியுறுத்தி சில கட்சிகளுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தோம். குறிப்பாக மாவை சேனாதிராஜா மற்றும் சித்தார்த்தன் ஆகியோர் அதற்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.

சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்னேஸ்வரன் ஐயா ஆகியோர் தமது ஆர்வத்தைத் தெரிவித்திருந்தாலும் கூட வேறு சிலரையும் உள்வாங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருக்கின்றார்கள்.

கஜேந்திரகுமார் தனது பதிலை அறிவிக்கவில்லை. ஆயினும் இந்த அணியில் அவர் தொடர்ந்து செயற்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

யாரை அழைப்பது என்ற விடயம் தொடர்பாக நாம் அனுப்பிய கடிதத்தில் சில தவறுகள் இருப்பதைக் குறிப்பிட வேண்டும். எந்தக்கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற விடயத்தை நாம் பார்க்கவில்லை.

விடுபட்டவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்பதில் நாம் ஆர்வமாக இருக்கிறோம். எமது இனத்தையும் மண்ணையும் காப்பதற்கான ஒற்றுமை வலுவாக வேண்டும். அதற்குத் தமிழீழ விடுதலை இயக்கம் எந்தவிதமான விட்டுக்கொடுப்பையும் செய்வதற்குத் தயாராக இருக்கின்றது.

இந்த விடயம் பிசுபிசுத்துப்போயுள்ளதாக சில ஊடகங்கள் தமது கருத்துக்களைச் சொல்கின்றன. ஆரம்பப்புள்ளியையே நாம் வைத்திருக்கின்றோம். அதில் தவறுகள் இருக்கும். அவற்றைத் திருத்திக்கொள்வோம்.

அதனைப் பெரிதுபடுத்தாது இந்த ஒற்றுமைக்கான வாய்ப்பைத் தரவேண்டும். கூட்டமைப்பு தான் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் இதனை நாம் செய்யவில்லை.

அத்துடன் இந்த ஒற்றுமை புலம்பெயர் உறவுகளோடும் தமிழ்நாட்டு மக்களோடும் பேணக்கூடியவகையில் இருக்கவேண்டும்.

அந்தவகையில் யாரை அழைப்பது யாரை விடுவது என்ற ஆலோசனையைப் பெறுவதற்கான கலந்துரையாடல் ஒன்றையை ஏற்பாடு செய்துள்ளோம். எனவே யாரும் விடுபடமாட்டார்கள்.

விடுபட்டவர்களையும் அழைத்துக்கொண்டு மிக விரைவிலே முழுமையான ஒரு கூட்டத்தை நடத்துவதற்கான முயற்சியை மேற்கொள்வோம். இது ஒரு கட்டமைப்பாக வருவதே சாலச்சிறந்ததாக இருக்கும்.

அதுவே காலத்தின் கட்டாயமாகவும் இருக்கிறது. நாம் சோர்ந்து போகமாட்டோம், அதற்கு என்ன விலை கொடுக்க வேண்டுமோ. அதனைச் செயற்படுத்தத் தயாராக இருக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

அரச தரப்புடன் இணைந்து செயற்படும் வடக்கினை சேர்ந்த கட்சிகளையும் இந்த கட்டமைப்பில் உள்வாங்கிச் செயற்படுவீர்களா என்று ஊடகவியலாளர் கேட்டதற்கு, அரசுக்கு எதிரான நடவடிக்கைகளையே நாம் மேற்கொள்ள இருக்கிறோம்.

ஆகவே ஒருவலுவான ஒற்றுமையை ஏற்படுத்தி அதன்மூலமாக அவர்களும் வரவேண்டும் என அனைவரும் கேட்டுக்கொண்டால் அதனை நாங்கள் பரிசீலிக்கத்தயார் எனத் தெரிவித்துள்ளார்.




# சீனக்குடாவில் விபத்து இருவர் படுகாயமடைவு

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி சீனக்குடா பகுதியில் அம்புலன்ஸ் மற்றும் லொறி நேருக்கு நேர் மோதியதில் இரண்டு வாகனங்களின் சாரதிகளுக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.15 மணியளவில் இடம்பெற்றது.

திருகோணமலையிலிருந்து கிண்ணியா நோக்கிச் சென்ற 1990 அம்புலன்ஸ்ஸும், கிண்ணியாவில் இருந்து திருகோணமலை நோக்கி வந்த லொறி ஒன்றும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் 1990 அம்புலன்ஸ் சாரதிக்கும், லொறியின் சாரதிக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்த விபத்து தொடர்பில் சீனக்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடளாவிய ரீதியாக ஞாயிறு 18,342 பி.சி.ஆர். சோதனை

இலங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 18 ஆயிரத்து 342 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த சோதனையின் மூலமாக 1,867 பேருக்கு தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஜூன் மாதத்தில் ஒரு நாளில் மிகக் குறைந்த எண்ணிக்கையாக சனிக்கிழமை 14 ஆயிரத்து 110 பி.சி.ஆர். சோதனைகள் மட்டுமே நடத்தப்பட்டன.

மேலும் நாளாந்தம் நடத்தப்படும் பி.சி.ஆர்.சோதனைகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கை தொடர்பாகப் பல தரப்பினரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

# வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய முதல்வர் அருட்சகோதரி ஜெயநாயகி உயிரிழந்தார்

## சுகவீனம் காரணமாம்

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலத்தின் முதல்வர் அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை சுகவீனம் காரணமாக நேற்று (திங்கட்கிழமை) மரணமடைந்தார்.

கடந்த சில மாதங்களாக சுகவீனமடைந்திருந்த அவர் அதற்கான சிகிச்சைகளை மேற்கொண்டு வந்திருந்தார். ஆயினும் நேற்றுக் காலை தனது 61 ஆவது வயதில் மரணமடைந்தார்.

தேசியப் பாடசாலையான வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்தில் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை அவர் முதல்வராக கடமையாற்றியிருந்தார்.

மீண்டும் 2016 ஆம் ஆண்டுமுதல் தற்போதுவரை பாடசாலையின் முதல்வராக அவர் செயற்பட்டிருந்தார்.

மன்னார் மாவட்டம் நானாட்டானை பிறப்பிடமாகக் கொண்ட அவர் பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் அதிக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விவசாயத்தில் நெருக்கடி நிலை

**கொரோனாப் பெருந்தாக்கம், அது ஏற்படுத்திய பேரிடர், பொருளாதார நெருக்குவாரம் இவற்றுக்கு மத்தியில் இன்னொரு பெரும் பிரச்சினை விரைவில் நாட்டைத் தாக்கப் போகின்றது.**

**ஒரே சமயத்தில் பல போர் முனைகளை அரசு திறந்து வைத்திருக்கின்றமையால் ஏற்படப் போகின்ற இக்கட்டு இது.**

**நாற்பது வருடங்களுக்கு மேல் நாட்டில் பின்பற்றப்பட்டு வந்த அசேதன இரசாயன உரங்கள், இரசாயனத் தொற்று நீக்கிகள், களை கொல்லிகள் போன்றவற்றுக்கு ஒரேயடியாக – ஒரே மூச்சில் – தடை விதித்திருக்கின்றது கோட்டா அரசு.**

**இதன் பக்க விளைவு பெருந்தாக்கமாக எதிரொலிக்கப் போகின்றது. நாடு பெரும் இக்கட்டையும், குழப்பத்தையும் சந்திக்கப் போகின்றது என விவரம் புரிந்தோர் எதிர்வு கூறுகின்றனர்.**

**இவ்வளவு காலமும் நமது விவசாயிகள், செயற்கை உரத்திலும், இரசாயன கிருமி கொல்லிகள் மற்றும் பீடை நாசினிகளிலும் முழு அளவில் தங்கித்தான் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.**

**இந்த இரசாயனப் பாவனையால் ஏற்படும் விளைவுகள் விபரீதமானவை, நாடு தாங்க முடியாத இன்னல்களைத் தருவன என்பவை எல்லாம் முற்றிலும் உண்மைதான். அவற்றைத் தவிர்ப்பதும் அவற்றுக்குத் தடை விதிப்பதும் சமுதாய நன்னோக்குக் கொண்ட நன் நடவடிக்கைகள்தாம். விஞ்ஞான ரீதியிலும் கூட மெச்சத்தக்க செயற்பாடுதான்.**

**ஆனால், அந்த முடிவை திடுதிப்பென ஒரே சமயத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது காரிய சாத்தியமான விவகாரமா?**

**அதனால் எழக் கூடிய பிரச்சினைகளை நாட்டினால் முகம் கொடுக்க முடியுமா? அதுவும் கொரோனாப் பேரிடரினால் நாடும் பொருளாதாரமும் துவண்டு கிடக்கையில், அந்த நலிவுக்கு, மத்தியில் இந்த விவசாய சீர்திருத்தத்தினால் ஏற்படக் கூடிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நாடு தப்பிப் பிழைக்க முடியுமா? – என்பவை எல்லாம் மலைப்பை ஏற்படுத்தும் கேள்விகள்.**

**அசேதன இரசாயன உரங்களுக்குப் பதிலாக போதிய சேதன உரங்களை உள்ளூரில் தயாரிக்கும் பொறிமுறைத் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இன்னும் செயற்படுத்தப்படவில்லை. கிருமி நாசினிகள், களை கொல்லிகள் விடயத்திலும் நிலைமை இதுதான். மாற்றுத் திட்டங்கள் இன்னும் நடைமுறைச் சாத்தியமாக முன்னெடுக்கப்படவில்லை.**

**இதற்கிடையில் பெரும்போக செய்கைக் காலம் வருகின்றது.**

**போதிய உரம் இல்லா நிலம். அதனால் உற்பத்தி, அறுவடை பெரும் வீழ்ச்சி காணும், போதாக்குறைக்கு இதுவரை பயன்படுத்திய பீடை நாசினிகள், கிருமி கொல்லிகள் இன்மையால் கிடைக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச மகசூலையும் களைகள், கிருமிகள், பீடைகள், பூச்சிகள், தத்துவெட்டிகள் அடியோடு நாசம் பண்ணும் ஆபத்தும் முழுமையாக உள்ளது.**

**இதனால், இம்முறை பெரும் போகத்தில் முதலுக்கே மோசம் போகும் நிலைமை நமது விவசாயிகளுக்கு நேரும் என்பது பலராலும் உறுதியாக எதிர்வு கூறப்படுகின்றது.**

**நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இந்த அசேதன உரங்கள், இரசாயனங்களின் உதவியுடன் இங்கு விவசாயம் செய்யப்படவில்லை என்பது உண்மைதான். அதேசமயம், இந்த அசேதன உரங்கள், இரசாயனங்களை விவசாயத்துக்குப் பயன்படுத்துமாறு தமது விவசாயிகளுக்கு வழிகாட்டி, ஆலோசனை வழங்கி, நெறிப்படுத்தியது இலங்கை அரசின் விவசாயத் திணைக்களமும் அமைச்சும்தான் என்பதும் மறுக்கக் கூடியதல்ல.**

**அரசின் இப்போதைய இந்தப் பிடிவாதமான – தளர்வு காட்டாத – வீம்பான – கட்டுப்பாட்டு முடிவினால் இம்முறை பெரும்போக நெற்செய்கை பல பிரதேசங்களிலும் பொய்த்துப் போகும் ஆபத்து இருக்கின்றது என்பதை அரசே உணர்ந்து, அந்த நெருக்கடிக்குத் தயாராவதாகத் தெரிகின்றது.**

**ஒரு லட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான முடிவை வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனா அமைச்சரவை மூலம் எடுத்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.**

**நாட்டில் உள்ள வர்த்தகர்கள், மொத்த வியாபாரிகள், அரிசி ஆலை உரிமையாளர்கள் போன்றோர் தம்மிடம் உள்ள அரிசி மற்றும் நெல் கையிருப்பை பதிவு செய்ய வேண்டும் என அரசு விடுத்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் போதுமான பிரதிபலிப்பு சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வராதமையால் அது தொடர்பான சட்ட இறுக்குவாரங்களை மேற்கொள்ள அரசு தயாராகி வருவதாகத் தெரிகின்றது.**

**அரிசியை உரிய விலைக்கு அதிகமாக விற்றால் விதிக்கப்படும் அபராதத் தொகையை 2 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவில் இருந்து ஒரேயடியாக ஐம்பதாயிரம் ரூபாவாக உயர்த்தும் சட்டத் திருத்தம் விரைவில் கொண்டுவரப்பட இருப்பதாகத் தெரிகின்றது.**

**இவை எல்லாம் பெரும் போகத்தை ஒட்டி வரப் போகின்ற நெருக்கடிகளுக்கான கட்டியம் என்றே நம்பலாம்.**

# ஐக்கிய தேசியக் கட்சியிலேயே நான் அங்கம் வகிக்கிறேன்

## ரவி கருணாநாயக்க திட்டவட்டம்



ஐக்கிய தேசியக் கட்சியிலேயே தாம் தொடர்ந்தும் அங்கம் வகித்து வருகிறேன் என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பான சர்ச்சை காரணமாக ரவி கருணாநாயக்க அண்மைக் காலமாக எவ்வித அரசியல் கருத்துக்களையும் வெளியிடவில்லை.

ரவி கருணாநாயக்க அரசியல் நடவடிக்கைகளிலிருந்து விலகிக்கொண்டுள்ளார் என சில தரப்பினர் கருத்து வெளியிட்டிருந்தனர்.

எனினும், தாம் செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளார் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை ஓரம் கட்டுவதில் சிலர் காட்டிய முனைப்பு தமது எதிர்த்தரப்பினரை விரட்டுவதற்கு காட்டவில்லை அதுவே தற்போதைய பிரச்சினை என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பயங்கரவாதத் தடைச்சட்டம், ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் அஸாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கலானது

குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அஸாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபரால் உயர் நீதிமன்றத்துக்கு நேற்று (திங்கட்கிழமை) அறிவிக்கப்பட்டுள்ளது.



பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் அறிவித்துள்ளார். மார்ச் 9 ஆம் திகதி ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்த கருத்து தொடர்பாக, மார்ச் மாதம் 16 ஆம் திகதி அஸாத் சாலி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வறுமைக் கோட்டில் வாழும் குடும்பங்களுக்கு மட்டக்களப்பில் உலர் உணவுப் பொருள்கள்







மட்டக்களப்பு, ஜுன் 29

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து, மிகவும் கஷ்டத்தில் வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

லண்டன் வோள்தஸ்ரோ கற்பக விநாயகர் ஆலய நிர்வாகத்தின் அனுசரணையில் அகிலன் பவுன்டேசனால், மட்டக்களப்பு – போரதீவுப்பற்று பகுதியில் வாழும் குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதாவது யுத்தத்தால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்ட குடும்பத்துக்கும் கொவிட் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த குடும்பத்துக்கும் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் 100 குடும்பத்துக்கு வழங்கப்பட்டன.

# போராட்டத்தில் ஈடுபட்டால் பொதுமன்னிப்பு கிடையாது

## சிறைச்சாலைகள் திணைக்களம் எச்சரிக்கை

சிறைச்சாலை பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கைதிகளின் பெயரை பொதுமன்னிப்பிற்காக பரிந்துரைப்பதைத் தவிர்ப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மரண தண்டனை கைதி துமிந்த சில்வா பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டமையை அடுத்து நாடளாவிய ரீதியில் பல சிறைச்சாலைகளில் மரண தண்டனை கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோரியே அவர்கள் சிறைச்சாலை கூரைமீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் மற்றும் சிறைச்சாலை பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் கைதிகளின் பெயரை பொதுமன்னிப்பிற்காக பரிந்துரைப்பதைத் தவிர்க்க சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதனைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அறிவித்துள்ளார்.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 35ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**341. இலங்கையில் அதிக பரப்பளவில் காடுகள் கொண்ட மாவட்டம் எது?**

**342. முதலாவது ரி-20 உலகக் கோப்பையை கைப்பற்றிய அணி எது?**

**343.வடமாகாணத்தில் எத்தனை புற்றுநோய் வைத்திய சாலைகள் உள்ளன?**

**344.இலங்கையில் உள்ள பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை யாது?**

**345.இறுதியாக நாடாளுமன்றம் வந்த புதிய உறுப்பினர் யார்?**

**346.உலகிலே மிகப்பெரிய கண்டம் எது?**

**347.உலகில் சனத்தொகை கூடிய நாடு எது?**

**348.முள்ளம்பன்றியின் உடம்பில் எத்தனை முள்கள் உள்ளன?**

**349.இலங்கையின் தேசியப் பறவை எது?**

**350.கரப்பான் பூச்சயின் இரத்தத்தின் நிறம் யாது?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ..................................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 33ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**321. ஜூன் 27**
**322. தண்ணீரும் கண்ணீரும்**
**323. மார்ஷியல் ஆர்ட்ஸ்**
**324.கைல் ஜமிசன்**
**325. எம்.எஸ்.சி.மெரினா**
**326. மக்ஸ் வெல்**
**327. Random Access Memory**
**328. பி.எஸ்.எம்.சாள்ஸ்**
**329. ஜூனில் மூன்றாவது ஞாயிறு**
**330. குமண**

## 27ஆம் திகதி வெளியான 33ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1.ரிஸ்மியா ஹமீட் - தெல்தோட்டை
2.ஜெ.வினோஜன் - குடத்தனை
3.எம்.வர்ணபாலன் - யாழ்ப்பாணம்
4.ஜே.சராதரன் - குப்பிளான்
5.பி.சயந்தன் - அரியாலை (8சரி)
6.எஸ்.சதுர்ஜினி- அல்வாய் - (9சரி)
7.கே.அனுஷன் - ஏழாலை - (9சரி)
8.ஏ.துஷான் - நீர்வேலி - (9சரி)
9.ஏ.சுதர்ஷன் - யாழ்ப்பாணம் (8சரி)
10.ஜ.கார்த்திகன் - யாழ்ப்பாணம் (8சரி)
11.எஸ்.சிறி இராமசந்திரன் - (7சரி)
12.கா.சிறிதரன் - கொழும்பு (7 சரி)

## யாழில் ஐரி தொழில்நுட்ப வளாகம் ஆரம்பிக்கஅமைச்சர் நாமல் நடவடிக்கை

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் ஐரி தொழில்நுட்ப வளாகம் ஒன்றை ஆரம்பிக்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பான விசேட பேச்சு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.மாநகர மேயர் வி.மணி வண்ணன், யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆகியோர் கலந்துகொண்டனர். இது தொடர்பாக யாழ்.மாநகர சபை முதல்வர் கருத்து தெரிவிக்கையில் –

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இந்த மண்டபத்தில் ஒரு பகுதியில் தொழில்நுட்ப வளாகத்தை உருவாக்க ஓர் இடத்தை ஒதுக்கித் தரமுடியுமா எனக் கோரியிருந்தார்.

இந்த கட்டடத் தொகுதி கட்டுமானம் முடிந்தும் ஒருவருடமாக மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்படாமல் உள்ளது. இதனை மக்கள் பாவனைக்காகத் திறப்பதற்கு இந்திய அரசு மற்றும் இலங்கை அரசும் உடனடியாக செயற்பட வேண்டும் என மாநகர முதல்வர் கோரினார்.

மாநகர சபை பராமரிக்க தன்னுடைய முழுமையான பணியை நிறைவேற்றியுள்ளது. கட்டடத்தை பொறுப்பேற்று பராமரிக்க, விரைவாக திறந்து தம்மிடம் தருமாறு கோரியதாகத் தெரிவித்தார்.

இதற்கு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார். மேலும் இந்தக் கட்டடத்தை பெரியதொரு நிகழ்வாக இருநாட்டு அரசும் இணைந்து திறந்து வைக்க விரும்புகின்றன எனத் தெரிவித்தார். கொவிட் காரணமாக தாமதித்தாலும் முதலே மக்கள் பாவனைக்கு திறந்து வைப்பதற்கும் ஆராய்ந்து வருகிறோம் என அமைச்சர் தெரிவித்தார்.

இதில் யாழ்.இந்திய துணைத்தூதுவரும் இதுபற்றி பேசி இணக்கம் ஒன்றைக் கண்டுள்ளனர். அத்துடன் யாழ். மாநகர சபைக்குள் செய்ய வேண்டிய திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவிகள் தொடர்பாக எழுத்து மூலமாக அமைச்சரிடம் கொடுத்திருக்கிறோம் என யாழ்.மாநகர சபை முதல்வர் தெரிவித்தார்.

## திருகோணமலையிலிருந்து பயணித்த லொறி கந்தளாய் பகுதியில் விபத்துக்குள்ளானது



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய்பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் சீமெந்து ஏற்றிச் சென்ற லொறியொன்று விபத்துக்கு இலக்காகியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை ஐந்து மணியளவில் கந்தளாய் 92ஆம் கட்டை சந்தியில் வைத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் லொறியின் சாரதி (வயது - 52) படுகாயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையிலிருந்து குருணாகலைக்கு பயணித்த லொறியொன்றே இவ்வாறு விபத்துக்கு உள்ளானதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தினாலேயே விபத்து நேர்ந்துள்ளதாக தெரியவரும் நிலையில் இது தொடர்பான விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது பொலிஸ் மா அதிபருக்கு ஷானி கடிதம்

குற்ற விசாரணைப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்ரமரட்னவிற்கு அபேசேகர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தமது உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் இதனால் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் அவருக்கு விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

சாட்சியங்களை திரிவுபடுத்தியதாக குற்றம் சுமத்தி ஷானி அபேசேகர நீண்ட நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் உயிரிழந்த ஒருவருக்கு கொவிட்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிறுநீரக நோய்க்காக சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் அவருக்கு கொவிட் தொற்று இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நெடுங்கேணியைச் சேர்ந்த குறித்த நோயாளி கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் சிறுநீரக நோய்க்காக சிகிச்சை பெற முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த நோயாளிக்கு ஏற்கனவே பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டிருந்த முடிவுகளின் படி அவருக்கு கொவிட் தொற்று இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நோயாளி சிறுநீரக நோய்க்கான குருதி மாற்றலுக்காக ஏற்கனவே யாழ் .போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு குருதி மாற்றப்பட்டு வீடு திரும்பிய நிலையில்,அதிகமாக குருதிப்பெருக்கு காரணமாக அவர் மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மன்னார் மாவட்ட மக்களுக்கு லயன்ஸ் கழகத்தால் உதவி



மன்னார் மாவட்டத்தின் பல இடங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மனிதாபிமான உதவிகளை வடக்கு லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைத்து வழங்கின.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா பேரிடரால் பாதிக்கப்பட்ட துள்ளுக் குடியிருப்பு மக்களுக்கு நிவாரண உதவிகளை சாவகச்சேரி லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவனுமாகிய லயன் ஆர்.ஜெயபாலனின் ஒழுங்கமைப்பில், சாவகச்சேரி இந்துக் கல்லூரி க.பொ.த. சாதாரண தர 1983 ஆம் ஆண்டு பழைய மாணவிகளின் நிதிப்பங்களிப்பில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகம், நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம், காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார், யாழ்ப்பாணம் நுழைவாயில் லயன்ஸ் கழகம், கிளிநொச்சி சிற்றி லயன்ஸ் கழகம், உரும்பிராய் லயன்ஸ் கழகம், மன்னார் லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் பங்குபற்றுதலில் இந்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

1,500ரூபாபெறுமதியிலானபொதிகள்70குடும்பங்களுக்கு மன்னாரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி 83 மாணவர்களால் 1,500 ரூபா பெறுமதியான பொதிகள் இதுவரை 550 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் செஞ்சோலையில் வளர்ந்த குடும்பங்களுக்கும் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் சென்ற வேளை அங்கே உள்ள விளையாட்டு கழகத்துக்கு விளையாட்டுப் பொருள்கள் கேட்டமைக்கு இணங்க, லயன்ஸ் கழக உறுப்பினர்களால் ஏற்பாடும் செய்யப்பட்டது.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 7 | கணிதம் | அலகு 13

## அலகு - திணிவு

**விடைகள்**

01.

03. 1.475g
04. 7.020g
05. 2.750g
06. 10.150g

02.

| | கிராம் | கிராம், மில்லி கிராம் | மில்லி கிராம் |
|---|---|---|---|
| | 1. 4g | 1g 400mg | 1400mg |
| 1. | 9.49g | 9g 490mg | 9490mg |
| 2. | 3.002g | 3g 2mg | 3002mg |
| 3. | 1.200g | 1g 200mg | 1200mg |
| 4. | 3.012g | 3g 12mg | 3012mg |
| 5. | 2.202g | 2g 202mg | 2202mg |
| 6. | 4.560g | 4g 560mg | 4560mg |

03.

02. 14g 320 mg
03. 49g 492mg
04. 145g 370mg
05. 102g 572mg

04.

02. 207g 850mg
03. 7g 165mg
04. 72g 600mg
05. 6g 990mg

05.

02. 61kg 440g
03. 96kg 800g
04. 903g 150mg
05. 155kg 550g

06.

02. 600g
03. 460mg
04. 1kg 410g
05. 500g

07. 12.50g

செல்வி ப. லாவண்யா
யா/ முத்துத் தம்பி மகா வித்தியாலயம்

# திருட்டுடன் தொடர்புடைய மூவர் திருகோணமலையில் கைதாகினர்

திருகோணமலை - மஹதிவுல்வெள பகுதியில் வீடுகளை உடைத்துக் களவாடிய குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவரை கைது செய்துள்ள நிலையில், திருடிய பொருள்களை வாங்கி தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மேலும் இருவரை கைது செய்யப்பட்டுள்ளதுப் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

மஹதிவுல்வெள - சுவர்ண ஜெயந்திபுரப் பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்துப் பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் அதே பகுதியைச் சேர்ந்த பிரசாத் சதுரங்க (வயது - 27) என்பவரை கைது செய்துள்ளளோம் எனவும்பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வீட்டை உடைத்த சந்தேகநபரை விசாரணை செய்தபோது இன்னுமொரு வீட்டை உடைத்து வீட்டிலிருந்த உலர் உணவுப்பொருள்களைத் திருடி விற்பனை செய்தார் எனவும், வீட்டிலிருந்தவர்கள் மரண வீடொன்றுக்குச் சென்ற போதே இந்த வீட்டை உடைத்தார் எனவும் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த நபரிடம் திருடிய பொருள்களை வாங்கி வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர் எனவும், அவர்களிடமிருந்து குளிர்சாதனப்பெட்டி, வானொலிப் பெட்டி (பொக்ஸ்) மற்றும் கேஸ் சிலிண்டர் போன்றவை கைப்பற்றப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருடிய பொருள்களை வாங்கி தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் அதே பகுதியைச் சேர்ந்த முதித பிரசன்ன விஜேரத்ன (வயது - 27), எச்.ஏ.பியசேன (வயது - 21) ஆகியோரை கைது செய்துள்ளோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெள பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## மண்ணின்றிய பயிர்ச்செய்கையின் முக்கியத்துவம்

1. பாரிய நிலப்பரப்பு தேவைப்படுவதில்லை.
2. மாடி வீட்டுத் தொடர்களிலும், மாடி வீடுகளின் மேல்மாடிகளில் காணப்படும் சிறிய இடப்பரப்பிலும் கூட மேற்கொள்ளலாம்.
3. பாதுகாக்கப்பட்ட இல்லங்களில் பயிர்செய்வதற்காக இம்முறையைப் பயன்படுத்தலாம்.
4. உடலுழைப்பு அதிகம் தேவையான பாத்தியமைத்தல், களை பிடுங்குதல் போன்றன இல்லாமை.
5. மண்ணிலிருந்து ஏற்படும் நோய்கள் இழிவாகும்.
6. மண்ணின்றிய சூழலில் பயிர்செய்ய முடியுமாகையால் புதிய சந்ததிகளையும் ஈர்க்கக் கூடியதாயிருக்கும்.
7. பழவகை, காய்கறிவகை, காளான்வகை, அலங்காரப் பொருள்கள், மலர்ச் செடி வகைகள் போன்றவற்றை வளர்க்கலாம்.
8. பயிர்ச்செய்கை செய்யப்படும் இடம் சுத்தமாகப் பேணப்படுவதுடன், நோய்கள் பீடைகள் குறைவாகவும் காணப்படும்.
9. நோய்கள் பீடைத்தாக்கங்கள் இம்முறையில் குறைவாகும். எனவே, இரசாயனப் பொருள்களின் பயன்பாடு குறைவு. இதனால் சூழலுக்கு அதிக தீங்கு ஏற்படமாட்டாது.எனவே, இம்முறை சூழல் நேயமானது எனலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி



**- செல்லத்துரை ரவீந்திரன் -**

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அங்கம் 50**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**154. இவை வண. பிதா இமானுவலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தினவா?**

நான் அவரைக் குடும்பத்தில் ஆளுமை கொண்ட ஒரு வணக்கத்துக்குரிய பிதாவாக 1976 இல் இருந்தே அறிவேன். அது நெருக்கமான உறவும் கூட. எனது சகலன் மறைந்த வண. பிதா ஜேம்ஸ் பத்திநாதர் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினரோடும் தமிழர் தகவல் நிலையத்தினரோடும் இணைந்து இயங்கிய காலங்கள் தொட்டு தமிழர் விடுதலை போராட்டங்களின் போக்குகள், அவை தரக்கூடிய விடிவுகள் பற்றி கருத்துரையாக்கங்கள் செய்திருக்கிறோம். ஆகவே அவரது மக்களுக்கான சேவையையும் தியான வாழ்வையும் ஒரு குடும்ப அங்கத்தினராக அறிந்திருந்தேன். அது போல் அவரது மதப்பற்றையும், அதனதுஒழுக்கநெறிகளில்கொண்ட அதீத மதிப்பையும், ரோம்



சிவநாயகம்

தலைமை தொட்டு நன்கு அறிந்திருந்தனர். ஆகவே சென்ற நாடுகளின் திருச்சபைகளிளெல்லாம் மதிப்புடன் வரவேற்கப்பட்டார். அவர்கள் ஊடாக அந்தந்த நாடுகளில் பல அரசு, அரசு சாரா அமைப்புகளின் கதவுகள் திறந்தன. அவரது ஆதங்கங்களை ஒரு வண பிதாவின் கூற்றுக்களாகவே செவிமடுத்தார்கள்.

அவர், தமிழர்களின் பல கால வன்மையற்ற போராட்டங்கள் பலனற்றுப் போக, விடுதலைக்கான அடுத்த கட்டப் போராட்டம் வன்முறைக்கு திரும்பி, விடுதலைப் புலிகள் தமது நிலைத்த தன்மையாலும், உறுதியான கோரிக்கைகளாலும், தியாகங்களாலும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்னெடுக்கும் நடைமுறை (De facto) தலைவர்களாக வளர்ந்துள்ளார்கள், ஆகவே அவர்களைப் புறம் தள்ளியோ, அவர்களையும் உள்ளடக்காத எந்த பேச்சுவார்தைகளோ தீர்வுகளோ பயனேதும் தரப்போவதில்லை என்று முன்வைத்த கருத்துக்கள் அவரை விடுதலைப் புலிகளின் பிரச்சார கருவியாக சிலரால் பார்க்க வைத்தது. சிங்கள ஊடகங்களால் அவர் பிரபாகரனின் கையாளாக தனித் தமிழ் ஈழம் நிறுவவே சர்வதேசத்தில் உழைக்கிறார் என அவதூறு சொல்லப்பட்டது.

வண. பிதா இம்மானுவேலும், குமார் பொன்னம்பலமும், சிவநாயகமும் சர்வதேசத்தில் வெளிப்படையாகப் பிரச்சாரங்களில் ஈடுபட்ட காலங்கள் சந்திரிகாவின் அரசாட்சி நாள்கள். பேச்சுக்கள் தொடக்கப்பட்டு, அவை முறிக்கப்பட்டு, ‘சமாதானத்துக்கான போர்’ என்ற ஒன்று தொடக்கப்பட்ட பின், பாரிய இடப்யெர்வுகளும் நடந்த தினங்கள். இவை நடுவே சர்வதேசத்தின் பல உறுப்பு நாடுகளும், பல புத்திஜீவிகளும் – முக்கியமாக தமிழர் கூட்டணி சார்பாக கலாநிதி நீலன் திருச்செல்வம் சந்திரிக்கா ஊடாக தரப்பட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை.

இந்த முயற்சிகளுக்கு – ஒரு சமாதான ஏற்பாடுகளுக்கு – சர்வதேச மட்டத்தில் பொதுவான ஆதரவும், விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கொப்பாத, அதற்கு இடங்கொடுக்காத, இணக்கமற்ற நிலைகளைத் தோற்றுவிக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஓர் இணக்கமான நிலைக்குத் தற்காலிகமாகவாவது வரும்படி ஆலோசனைகள் கூறுமாறு கேட்கப்பட்டார்கள்.

வண. பிதா இம்மானுவலோ பேச்சுவார்த்தைகள் பற்றியும், அவற்றின் முறிவுகள் பற்றியும் விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கைகளை நியாயப்படுத்தி, “தமிழர்களது நடைமுறைத் தலைவர்கள் வன்முறையாளர்களாக மாறிவிட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆணை தமிழ் மக்களால்



வண. பிதா இமானுவல்

ஏற்கப்பட்டவை. எனவே மக்களால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைத் தலைவர்களை அழிக்க முயல்வது சமாதானத்துக்கான கதவுகளை மூடுவதாகும்” என அறுதியிட்டுச் சொன்னார். ‘‘Though the (Tamils) de facto leadership has become a militant one, the mandate they carry is an approved mandate of the Tamil people. Destroying an existing de facto leadership is closing the door to peace negotiations.

அவர்களோடு இணைந்து பணி செய்த சிவநாயகமோ அந்த கேள்விகளுக்கு பதிலுரையாக –“வந்தவர் போனவரெல்லாம் யாரென்றில்லாமலே பிரபாகரனை குற்ற நோக்கோடும் குறுகுறுக்க வைக்க வேண்டும் என்று கேள்விகளால் அவர் ஓர் இடம் கொடுக்காது சங்கடம் செய்கிறார் என்று பேசினார்கள், எழுதினார்கள். அப்படியானால் அவர். தாங்கள் எடுத்த எடுப்புக்கு இணங்கவில்லை என்ற அர்த்தம்தானே? அப்படி குற்றம் சாட்டுவோர் விளங்கிக் கொள்ளாதது என்னவென்றால் இன்றைக்கு விடுதலைப் புலிகள் இந்த உயர்ந்ததும், அதிகாரம் செய்கின்றதுமான நிலையில் இருப்பதற்கும், உலகின் உச்ச அதிகார நாடே அவர்கள் பெயரை விரும்பியோ விரும்பாமலோ உச்சரிக்கின்றமைக்கும், கணக்கெடுக்கின்றமைக்கும் காரணம் என்னவென்றால் அந்த விட்டுக்கொடுக்காமைதான். பிரபாகரன் ஒரு விடுதலை நோக்கத்துடன் துவக்கையும் சயனைட்டையும் எடுத்த நாளிலிருந்தே எப்பொழுதும் ஒரு நாட்டிலிருந்தல்ல, இரண்டு நாடுகளால் அவற்றை விட்டுவிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். அதற்காக அவற்றை விட்டுக் கொடுத்தவரல்லர் அவர். இன்றைக்கு எத்தனையோ நாடுகளின் நேரடியானதும் மறைமுகமான அனுசரணைகளோடு சிறிலங்கா அவரை நீக்கவோ புறந்தள்ளவோ முயலும் போது, அவர் ஒரு தனி ஆளாக, தன்னுடன் தனக்காக தந்த மீளமுடியாத, மீளவிரும்பாத உறுதியில் நிற்கும் இளம் புலிகளின் அர்ப்பணிப்பில் நிமிர்ந்து நிற்கின்றார். இது உலகில் காணக்கிடைக்காத அபூர்வமான நிகழ்வு.

“வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றி ஒரு விடுதலையின் தலைவனாக நிமிர்ந்த அமிர்தலிங்கம் அந்த எதிர்கட்சித் தலைவரென்ற பதவிக்காக இணங்கிப் போனார். அது இணக்கம். இந்த இணக்கத்தில் தொடர்ந்த வெற்றுமான அரசியலில் தமிழ் மக்கள் பிறப்பித்த ஓர் உறுதியான தலைவனே பிரபாகரன். அவர், தமிழரது தன்மானம், தமிழரது உரிமை என்பவற்றில் இணக்கம், விட்டுக் கொடுப்பு என்பவை இல்லை என்றே புறப்பட்டவர். சிங்கள காடைத்தனத்துக்கு முன்னும், அரச பயங்கரவாதத்துக்கு மறுமொழியாகவும் மேசையில் முஷ்டியால் குத்துவது பயனில்லை, அதற்கு ஆயுதங்களின் துணை வேண்டும். அப்படித்தான் பிரபாகரன் பிறந்தான்.” – என்றார்.

உண்மையில் தோய்ந்த வார்த்தைகள். ஆனால் புவியியல் நகர்வுகளில், அவற்றின் போக்குகளில், இருக்க கூடிய நெளிவு சுழிவுகள் காணப்படவில்லை.

அந்த நாள்களில் தமிழர் தரப்பில் சர்வதேச ரீதியில் இந்த மூவரது ஆளுமையே இருந்தது. அவர்கள் மூவரும் விடுதலைப் புலிகளின் நிலையை நியாயப்படுத்தி கொண்டிருந்தனர். சர்வதேசம் பழையபடி தீர்வாக எதைத்தான் கேட்கிறார்கள் என்று திரும்ப திரும்ப கேட்டது. விழி பிதுங்கியது. புலிகளது அக்கறைகளோ நோக்கோ வேறு. இது பாலசிங்கத்தையும் சங்கடப்படுத்தியது.

(வளரும்)



குமார் பொன்னம்பலம்

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 9** | **கணிதம்** | **அலகு 14**

## ஒழுக்குகளும் அமைப்புகளும்

∗ ஒரு நிபந்தனையை அல்லது சில நிபந்தனைகளை திருப்தியாக்கு மாறு உள்ள புள்ளிகளின் தொடையானது ஒழுக்கு என படும்.

**அடிப்படை ஒழுக்குகள்**

1. வட்டம்
2. செங்குத்து இருகூறாக்கி
3. கோண இருகூறாக்கி
4. சமாந்தரம்




**வட்டம்**

∗ ஒரு நிலைத்த புள்ளியில் இருந்து மாறாத்தூரத்தில் இருக்கும் புள்ளிகளின் ஒழுக்கு ஒரு வட்டமாகும்.


உதாரணம் -





கடிகாரத்தின் ஊசல் குண்டு ஒழுக்கு

∗ புள்ளி ஒன்றிலிருந்து 5cm மாறாத்தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கு




**01. பயிற்சி**

(1) புள்ளி ஒன்றிலிருந்து 3cm மாறாத்தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைக.

(2) (1) AB=5cm ஆகவுள்ள நேர்கோட்டை வரைக.


1. புள்ளி A இலிருந்து 4cm மாறாத்தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைக.

2. புள்ளி B இலிருந்து 2cm மாறாத்தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைக.

3. இரு ஒழுக்குகளும் சந்திக்கும் புள்ளிகளை x,yஎனப் பெயரிடுக.

**செங்குத்து இருகூறாக்கி**

∗ இரு நிலைத்த புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் உள்ள புள்ளியின் ஒழுக்கு அவ்விரு புள்ளிகளையும் தொடுக்கும் கோட்டின் **செங்குத்து இருகூறாக்கி** ஆகும்.




**02. பயிற்சி**


(1) (1) PQ=8cm ஆகவுள்ள நேர்கோடு ஒன்றை வரைக.
(2) புள்ளிகள் P,Q இற்கு சம தூரத்தில் அசையும் ஒழுக்கை வரைக.

(2) (1) AB=6.5cm ஆகவுள்ள நேர்கோடு AB ஐ வரைக.
(2) AB இன் செங்குத்து இருகூறாக்கியை வரைக.


(3) (1) xy=10cm ஆகவுள்ள நேர்கோடு xy ஐ வரைக.
(2) xy இன் செங்குத்து இருகூறாக்கியை வரைக.

**பாகைமானி/ கோணமானி பயன்படுத்தி கோணங்களை அமைத்தல்**

உதாரணம் -




(1)கோணங்களின் பெறுமானங்களை இனங்காண்க.



.............................. ..............................

(2) பாகைமானி / கோணமானி பயன்படுத்தி கோணங்களை அமைக்குக.

30° 60°

45° 15°


110° 135°

170° 195°

210° 270°

**கோண இருகூறாக்கி**

∗ ஒன்றையொன்று இடைவெட்டும் இரு நேர்கோடுகளிலிருந்து சமதூரத்தில் இருக்கும் புள்ளிகளின் ஒழுக்கு அவ்விரு கோடுகளும் இடைவெட்டுவதனால் உண்டாகும் கோணத்தின் இருகூறாக்கி ஆகும்.




பயிற்;சி

(1) 1) ABC = 50° ஆகுமாறு ABCஐ பாகைமானியை பயன்படுத்தி அமைக்குக.
2) பக்கங்கள் AB,BCஇற்கு சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைக.

(2) 1) PQR = 110°ஆகுமாறு PQRஐ அமைக்குக.
2) PQR இன் இருகூறாக்கியை வரைக.

(3) கோண இருகூறாக்கிகளை வரைக.(பாகைமானியை பயன்படுத்தி கோணங்களைஅமைக்குக)

1.90° 2. 120° 3. 65°

ஆக்கம் :- தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா/ செங்குந்த இந்துக் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/ தேசிய கல்வியயற் கல்லூரி

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021


**தரம் - 9** | **கணிதம்** | **அலகு 14**

## ஒழுக்குகளும் அமைப்புகளும்

08ஆம் பக்கத் தொடர்ச்சி.....

**வெளிப்புள்ளி ஒன்றிலிருந்து ஓர் நேர்கோட்டுக்கு செங்குத்து அமைத்தல்**

* வெளிப்புள்ளியிலிருந்து தரப்பட்ட ஒரு நேர்கோட்டிற்கு கவராயத்தால் வில்வெட்டி அவ்வில் கோட்டை வெட்டும் புள்ளியிலிருந்து செங்குத்து வரைதல்




**பயிற்சி**

1. • P

A ———————— B

2.

X ———————— Y

• Z

3. • X


P ———————— Q

4.

S ———————— T

• R

**ஓர் நேர்கோட்டின் மீதுள்ள புள்ளியல் செங்குத்து அமைத்தல்**




1. AB = 7cm , AP = 3cm ஆக இருக்குமாறு AB மீது Pயை குறித்து P இலிருந்து ABஇற்கு செங்குத்துக் கோட்டினை அமைக்க.




2. PQ = 10cm , PX = 3cm PY = 6cm ஆக இருக்குமாறு PQமீது X,Yயை குறித்து X,Y இலிருந்து PQஇற்கு செங்குத்துக் கோட்டுகளை அமைக்க.




**கோணம் அமைத்தல்**

கவராயத்தைப் பயன்படுத்தி 30°, 60°, 45°, 90°, 120°, 135°, 75°, 105° போன்ற கோணங்களை அமைக்கும் முறைகள் கணிதப்புத்தகத்தில் 66ஆம் பக்கம் தொடக்கம் 69ஆம் பக்கம் வரை காட்டப்பட்டுள்ளது. அதை அவதானிக்குக

1. 60°
2. 120°
3. 90°
4. 135°
5. 105°
6. 30°
7. 15°
8. 45°
9. 15°
10. 75°

**பயிற்சி**

(1)

1) 7Cm ஆகவுள்ள நேர்கோட்டை வரைந்து அதை PQ என பெயரிடுக.

2) PQ ஐ ஒரு புயமாக கொண்டு புள்ளி P இல் 60° அமைக்க.

3) PQ ஐ ஒரு புயமாக கொண்டு புள்ளி Q இல் 30° அமைக்க.

4) அமைப்புக்கோடுகளை உகந்தவாறு நீட்டுவதன் மூலம் அவற்றின் வெட்டுப்புள்ளியை R எனபெயரிட்டு முக்கோணி ABC ஐப் பூரணப்படுத்துக.

(2)

1) BC = 7.5cm, ABC = 60°, AB = 6cm ஆகவுள்ள ΔABC ஐ அமைக்குக.

2) புள்ளிகள் A, B இலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைக.

3) புள்ளிகள் B, C இலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைக.

4) இரு ஒழுக்குகளும் சந்திக்கும் புள்ளியை X எனப் பெயரிடுக.

5) X ஐ மையமாகவும் AX ஐ ஆரையாகவும் கொண்ட வட்டத்தை வரைக.

6) அதன் ஆரையை அளந்தெழுதுக.

**ஆக்கம் :- தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா/ செங்குந்த இந்துக் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/ தேசிய கல்வியயற் கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

## சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு நினைவாக சிறப்பு நாணயத்தை வெளியிடவுள்ளது இலங்கை

எதிர்பார்க்காத நகர்வாக, இலங்கை, வெளிநாட்டு அரசியல் கட்சியான சீன கம்யூனிஸ்ட் கட்சி (சிபிசி) நூற்றாண்டு நினைவாக ஒரு சிறப்பு நாணயத்தை வெளியிடவுள்ளது.

மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் இந்த முடிவை உறுதிப்படுத்தியுள்ளார் எனவும், ஆனால் விவரங்களை வழங்கவில்லை என கொழும்பின் ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுடனான இராஜதந்திர உறவுகளின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளைக் குறிக்கும் வகையில் நினைவு நாணயங்களை வெளியிடுவது இலங்கை மத்திய வங்கியின் நடைமுறையாக இருந்து வருகிறது.

எனினும் , முதன்முறையாக ஒரு வெளிநாட்டு அரசியல் கட்சிக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. சீன கம்யூனிஸக் கட்சியின் நூற்றாண்டு கொண்டாட்டங்களுக்கான ஒரு நல்லெண்ண செயலாக, சீனா நாணயங்களை அச்சிட்டு, இலங்கை மத்திய வங்கி அவற்றைப் பிற நட்பு நாடுகளுக்கு வழங்க வாய்ப்புள்ளது.

இந்த நாணயம் ஒரு புழக்கத்தில்லாத நினைவு நாணயம் மாத்திரமா? அல்லது புழக்கத்தில் இருக்கும் நிலையான நினைவு நாணயமாக இருக்குமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சீன கம்யூனிஸக்கட்சியின் 100 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக நினைவு நாணயங்களின் தொகுப்பை வெளியிடச் சீனாவின் மத்திய வங்கி திங்களன்று வெளியிட்டது.

இந்தத் தொகுப்பில் ஒன்பது நாணயங்கள் உள்ளன, அவற்றில் மூன்று தங்கம், ஐந்து வெள்ளி, மற்றும் ஒரு செப்பு நாணயம் ஆகியவை உள்ளன என்று 'பீப்பிள்ஸ் பேங்க் ஒஃப்' சீனா அறிவித்தது. மூன்று தங்க நாணயங்கள், ஒவ்வொன்றும் 8 கிராம் நிறையைக் கொண்டவையாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் தனியார் சட்டங்களின் உருவாக்கம்

பஸ்றி ஸீ. ஹனியா
LL.B (Jaffna)

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், 1801ஆம் ஆண்டின் நீதி சாசனம் அந்த நேரத்தில் நடைமுறையில் இருந்த சட்டங்களின் தொடர்ச்சியை உறுதி செய்தது. இந்தப் பொருந்தக்கூடிய சட்டங்கள் அனைத்தும் பின்வருவனவாக இருந்தன:- டச்சுக்காரர்களால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ரோமன் – டச்சு கொள்கைகள், கண்டியன் மாகாணங்களுக்குப் பொருந்திய கண்டியன் சட்டம், யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணத் தமிழர்களுக்குப் பொருந்தும் தேசவழமைச் சட்டம், முஸ்லிம்களுக் குப் பொருந்திய முஸ்லிம் சட்டம்.



வெவ்வேறு சட்டங்களின் இந்த ஒருங்கிணைப்பு பிரிட்டிஷ் நீதிபதிகள் பொருந்தக்கூடிய சட்டங்களைக் கண்டறிவதில் சில சிரமங்களை எதிர்கொண்டது. குறிப்பாக ரோமன் – டச்சு சட்டக் கோட்பாடுகள் பின்பற்றப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன் விளைவாக, பல சந்தர்ப்பங்களில், பிரிட்டிஷ் நீதிபதிகள் ரோமன் – டச்சு சட்டத்தின் பொருந்தக்கூடிய தன்மை குறித்து தெளிவற்ற தன்மை இருப்பதன் அடிப்படையில் ஆங்கிலச் சட்டத்தின் கொள்கைகளை அறிமுகப்படுத்தினர். நீதித்துறை முன்மாதிரிகளின் பற்றாக்குறை மற்றும் சட்டங்களின் குறியிடப்படாததன்மை ஆகியவற்றால் ரோமன் – டச்சு சட்டக் கொள்கைகளைப் பயன்படுத்துவதை நீதிபதிகள் தவிர்த்தனர்.

இதன் விளைவாக கண்டியன் சட்டம் மற்றும் தேசவழமை போன்ற சுதேசிய சட்டங்களுக்கு மேலதிகமாக, ரோமன் – டச்சு சட்டத்துடன் ஆங்கில சட்டக் கொள்கைகளும் அமுலில் இருந்தன.

ரோமன் – டச்சு சட்டம் இலங்கையில் ஒரு மரபு ரீதியான சட்ட மரபைக் குறிக்கின்றது. இது பல உள்நாட்டுச் சட்டங்களுடனும், ஆங்கிலப் பொதுச் சட்டத்துடனும் இணைந்து, ஒரு தனித்துவமான சட்ட கலாச்சாரத்தை உருவாக்கி, இன்று ஒரு கலப்பு சிவில் மற்றும் பொதுவான சட்ட அமைப்பு என்று விவரிக்கப்படுகின்றது.

இன்று, ரோமன் – டச்சு சட்டம் இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவில் மட்டுமே உள்ளது.



மத்திய இலங்கையில் கண்டியின் முடியாட்சிக் காலத்தில் அவர்களின் பரம்பரையை அறியக்கூடிய சிங்கள இனத்துக்கு கண்டியன் சட்டம் பொருந்தும். 1815இல் மத்திய இலங்கையை பிரிட்டிஷ் கையகப்படுத்தியதன் மூலம் கண்டியன் முடியாட்சி நிறுத்தப்பட்டது.

இப்போது கண்டியில் வசிக்கும் அனைத்து சிங்களவர்களுக்கும் கண்டியன் சட்டம் பொருந்தாது. இருப்பினும், மத்திய இலங்கையில் உள்ள இப்போது வசிக்காத கண்டிச் சிங்களவர்களுக்கும் கண்டியன் சட்டம் பொருந்தும். இன்றைய இலங்கையில் கண்டியன் சிங்களவர்களுக்குப் பொருந்தக்கூடிய கண்டியன் சட்டம் திருமணம், விவாகரத்து மற்றும் சொத்துரிமை ஆகியவற்றுடன் தொடர்புடையது.



சட்டம் ஒரு

வெளிச்ச அறை

கண்டியன் சிங்களவர்களுக்கு திருமணம் மற்றும் விவாகரத்து (கண்டியன்) சட்டம் அல்லது பொது திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்ய வேண்டும் என்பதனைத் தெரிவு செய்யலாம். கண்டியன் சட்டத்தின் கீழ் திருமணம் செய்யத் தேர்வு செய்யும் கண்டியன் சிங்களவர்கள், கண்டியன் சட்ட கட்டளைச் சட்டத்தின்படி திருமணம், விவாகரத்து மற்றும் சொத்துரிமை தொடர்பான விடயங்களில் கண்டியன் சட்டத்தால் நிர்வகிக்கப்படுவார்கள். அத்துடன் கண்டியன் திருமண மற்றும் மரபுரிமை கட்டளைச் சட்டத்தின் கீழும் நிறுவகிக்கப்படுவார்கள்.

தத்தெடுப்பு தொடர்பான கண்டிய சட்டங்களும் கண்டியன் சட்டத்தின் கீழ் திருமணம் செய்பவர்களுக்குப் பொருந்தும்.

பொது திருமண கட்டளைச் சட்டத்தின் (General Law) கீழ் திருமணம் செய்யத் தேர்வுசெய்யும் கண்டியன் சிங்களவர்கள் ரோமன் – டச்சு சட்டத்தால் திருமணம், விவாகரத்து மற்றும் சொத்துரிமை தொடர்பான விடயங்களில் நிறுவகிக்கப்படுவார்கள்.

இது தொடர்பான சட்டங்கள் கண்டியன் பிரகடனம், திருத்தம் மற்றும் கண்டியன் திருமணங்கள் மற்றும் விவாகரத்து சட்டத்தில் உள்ளன.

தேசவழமைச் சட்டம் இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழர்களின் பழங்கால பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இது வட இலங்கையில் உள்ள யாழ். தீபகற்பத்தில் உள்ள தமிழ் மக்களுக்குப் பொருந்தும். இந்த வழக்கமான மற்றும் தனிப்பட்ட சட்டம் யாழ். தீபகற்பத்தில் வாழாத ஏராளமான யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் பொருந்தும்.

யாழ். தீபகற்பத்தில் வசிக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு மட்டுமே தேசவழமை பொருந்தும் என் பது இலங்கையில் பலரிடையே பொதுவாக நம்பப்படும் நம்பிக்கை. எவ்வாறாயினும், 1988 ஆம் ஆண்டு இலங்கையின் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது, ‘சிவக்னலிங்கம் V. சுந்தரலிங்கம்’ தேசவழமை என்பது யாழ்ப்பாணத் தமிழர்கள் நாட்டில் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்குப் பொருந்தும் ஒரு தனிப்பட்ட சட்டமாகும். மேலும் இது அவர்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளுக்கும் பொருந்தும். நாட்டில் எங்கிருந்தாலும் அது அமைந்துள்ளது.

கீழ் நீதிமன்றங்களின் தீர்ப்புகளை இரத்து செய்த உயர்நீதிமன்றம், யாழ்ப்பாணத்தில் வசிப்பதைக் கைவிடுவதற்கான தெளிவான சான்றுகள் இருந்தால் மட்டுமே தேசவழமை யாழ்ப்பாணத் தமிழர்களுக்குப் பொருந்தாது என்று கூறியது.

குடும்ப சட்டம் தொடர்பான பிரச்சினைகளில், முஸ்லிம் சிறப்பு சட்டங்கள் இலங் கையில் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் பொருந்தும். திருமணம் மற்றும் விவாகரத்து (முஸ்லிம்) சட்டம் மற்றும் திருத்தங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

> நீதித்துறை முன்மாதிரிகளின் பற்றாக்குறை மற்றும் சட்டங்களின் குறியிடப்படாத தன்மை ஆகியவற்றால் ரோமன் – டச்சு சட்டக் கொள்கைகளைப் பயன்படுத்துவதை நீதிபதிகள் தவிர்த்தனர்.

முஸ்லிம்களை உள்ளடக்கிய இடைநிலை வாரிசுகள் மற்றும் நன்கொடைகள் தொடர்பான பிரச்சினைகள் முஸ்லிம் இன்டர்ஸ்டேட் வாரிசு கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்க்கப்படுகின்றன.

காலைக்கதிர்
Kalaikkathir



# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்

## ஓர் அனுபவத் தொடர்



அங்கம் 11

எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்.

### தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து வெளியேறல் - Discharge

PCR பரிசோதனையிலிருந்து சரியாக 07 நாள்களின் பின்னர் என்னை வீடு செல்வதற்காக அனுமதித்தார்கள். 2021 ஜூன் 04ஆம் திகதி தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வீடு செல்வதற்கு







என்னை தயார்ப்படுத்திக் கொண்டேன். நான் தங்கியிருந்த அறையினை நேர்த்தியாக ஒழுங்கமைத்து சுத்தப்படுத்திக்கொண்டேன். சற்று நேரத்தின் பின்னர் அன்றைய தினம் வீடு செல்பவர்களது விவரம் ஒலிபெருக்கியினூடாக தெரிவிக்கப்பட்டது. புதிதாக இணைந்த எனது நண்பர்களுடன் விடைபெற்று வீடு செல்ல ஆயத்தமானேன். மீண்டும் நோயாளர் காவுவண்டி மூலமாக எனது வீட்டுக்கு அனுப்பிவைத்தார்கள்.

தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வீடு செல்வதற்கு முன்பதாக 10 நாள்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து சிகிச்சை பெற்றதனை உறுதிப்படுத்தி (Diagnosis Card) சான்றிதழ் எனக்கு வழங்கப்பட்டது. அச்சான்றிதழில் PCR பரிசோதனை மேற்கொண்ட திகதி, தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு வந்த திகதி, சிகிச்சை முடித்து வீடு திரும்பிய திகதி, சிகிச்சைக்கு பின்னரான மீள வீட்டில் தனிமைப்படுத்த வேண்டிய காலம் என்பன குறிப்பிடப்பட்டிருந்தமையுடன் நோய்க்கான உடலில் தென்படும் அறிகுறிகளும் குறிப்பிடப்பட்டிருந்தன.

சிகிச்சை நிலையத்திலிருந்து கொவிட் நோயாளிகளினைவெளியேற்றுவதற்கானகாரணிகளினை தீர்மானிக்கும் போது சுகாதார அமைப்பின் தற்போதைய திறன், ஆய்வக பரிசோதனை வளங்கள் மற்றும் தற்போதைய தொற்றுநோயியல் நிலைமை என்பன முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன. கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்துதனிமைப்படுத்தல்நிலையத்தில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சரியாக 10 நாள்களின் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகின்றார்கள்.

தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் 2021 ஜூன் 03 இலிருந்து 2021 ஜூன் 06 வரை மேலும் 04 நாள்கள் வீட்டில் மீளவும் தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு கூறினார்கள். 14 நாள்கள் முழுமையாக முடிவடைந்த பின்னர் வீட்டிலிருந்து வெளியேற முடியும் என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் குறிப்பிட்டிருந்தனர். நான் வீடு சென்ற பின்னரும் மீளவும் தனிமைப்படுத்தல், எனது குடும்பத்தாருக்கான PCR பரிசோதனை முடிவுகள் என இடர்பாடுகள் நீண்டு செல்லும். நான் கடந்து வந்த நிகழ்வுகளினை நினைத்துப் பார்க்கையில் நான் அனுபவித்த துயரங்களிலிருந்து இந்நோய் எதிரிக்கு கூட வரக்கூடாது எனக் கடவுளை வேண்டுகின்றேன்.

எனினும் இங்கிருந்து செல்பவர்கள் நோயிலிருந்து மீண்டு செல்கின்றனர் என்பதை குறிப்பிட முடிகின்றதே தவிர அவர்கள் பூரணமாக குணமடைந்து விட்டனர் என்பதற்கு எவ்வித சான்றுகளும் இல்லை என்பது சற்று வருத்தமளிக்கிறது. என்னால் இத்தொற்று நோய் எனது குடும்பத்தினருக்கோ அல்லது என்னைச் சுற்றி இருப்பவர்களுக்கோ வரக்கூடாது என்பதில் கூடிய கவனம் கொண்டிருந்து தனிமையிலிருந்த வழக்கம் மற்றும் முன்னனுபவமற்ற இந்நிலையில் பின்பற்ற வேண்டியவைகளை நினைத்துக் கடினப்பட்டதுடன் ஒரு சவாலாக இதையும் செய்யமுடியும் என்பதையும் நினைத்து புளகாங்கிதம் அடைந்தேன்.

இவ்வாறாக 08 நாள்கள் குடும்பத்தினைப் பிரிந்து தனிமையில் இருப்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும். எனினும் அங்கு எங்களது செயற்பாடுகள், நேர்ச்சிந்தனைகள், நட்பு வட்டங்களை ஏற்படுத்தி அளவளாவுதல் என என்னுடைய நாள்கள் வேகமாகவே நகர்ந்தன. அங்குள்ளவர்கள் மிகவும் சினேகபூர்வமாகவும் ஆறுதலளிப்பவர்களாகவும் இருந்தனர். எனினும் செய்தியாக அறிந்த விடயங்கள் எமக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் போது மனம் அதை ஏற்க மறுக்கிறது. தொடர்ச்சியான அவல இழப்புகள் இருந்தும் இதனை ஒரு சவாலாகவே தற்துணிவுடன் எதிர்கொண்டு இதையும் கடந்து போக வேண்டுமென்ற எண்ணத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

### கோப்பாய் கொவிட் - 19 சிகிச்சை நிலையம் தொடர்பான சுருக்கமான வெளிப்படுத்துகை

நான் 27.05.2021 ஆம் திகதி தொடக்கம் 03.06.2021 ஆம் திகதி வரை இந்த சிகிச்சை மையத்தில் தங்கியிருந்த போது சிகிச்சை நிலையம் தொடர்பான எனது பார்வையும் மற்றும் சக தொற்றாளர்களது பார்வையும் என்ற எண்ணப்பாட்டுக்கேற்ப வைத்தியத்துறையினரது அர்ப்பணிப்பான சேவை, தொற்றாளர்களது பராமரிப்பு முகாமைத்துவத்தில்



தொற்றாளர்களின் பங்கு, நிர்வாக குறைபாடுகள் மற்றும் அவற்றிற்கான பரிந்துரைகள் என நான்கு வகுதிகளாகப் பிரித்து இங்கு கூறப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஆரோக்கியமானவையாகவும் உரியவர்களுக்கு சேரச் செய்து இதன் பிரதிபலனை இச்சிகிச்சை நிலையத்தில் உயரிய வினைத்திறனான சேவையை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் இங்கு முன்மொழியப்படுகின்றனவே தவிர ஏனையவர்களைப்போல சமூக ஊடகங்கள் ஊடாக விமர்சனம் செய்து பெருமைப்படுத்திக் கொள்வதற்காக இல்லை என்பதாகும்.

### கோப்பாய் சிகிச்சை மையம் தொடர்பான எனது பார்வை

இக்கொரோனா சிகிச்சை நிலையத்தில் இருந்து சுகதேகியாக வீடு திரும்பிய நிலையில், இங்கிருந்து பயன்பெற்றவன் என்ற வகையில் இங்கு வைத்தியத்துறையினரின் அளப்பரிய சேவைகள், அர்ப்பணிப்பான செயற்பாடுகள், தொற்றாளர்களின் சிகிச்சை நிலைய பராமரிப்பின் பங்கு போன்றவற்றை குறிப்பிடும் அதேவேளை அங்கு அவதானித்த குறைபாடுகள் அவற்றுக்கான பரிந்துரைகள் தொடர்பாக தெரிவித்திருக்கின்றேன். இதன்மூலம் குற்றம் கூற விளைவது எனது நோக்கல்ல. நல்லதொரு ஆரோக்கியமாக விடயங்களை கருத்திலெடுத்து மேலும் திறம்பட வைத்திய சேவையினைச் செய்து, தொற்றாளர்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் எனக்கருதியே குறிப்பிட்டிருக்கின்றேன்.

### 1. வைத்தியத்துறையினருக்கான பங்கு

நான் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் இச்சிகிச்சை நிலையத்தின் அளப்பரிய சேவையினை இங்கு மனமுவந்து வியக்கின்றேன். சிகிச்சை நிலையமே நெரிசலாகும் அளவுக்கு எங்கள் பகுதியிலுள்ள மக்கள் அங்கு அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றார்கள். பல எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் இங்கு கொரோனா நோயாளிகளுக்கான மருத்துவமனையை உருவாக்கிய பெருமை வைத்திய துறையினரையே சாரும். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கொரோனா நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவச் சிகிச்சையை வழங்கும் மருத்துவமனையாக விளங்குவது பெருமைக்கும் பாராட்டுக்குமுரியது. அத்துடன் எமது பிரதேசத்திலேயே எனது வீட்டுக்கருகிலுள்ள சிகிச்சை நிலையத்திற்குச் சென்று பயன்பெற வாய்ப்பு இக்கனவான்களால் உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களது தூரநோக்கம் இன்று நிறைவேறியுள்ளது.

இங்கு பணியாற்றுகின்ற மருத்துவர்களின் பணி என்பது மிகவும் போற்றத்தக்க காத்திரமான பணியாக அமைந்திருக்கின்றது. சாதாரணமான வைத்தியசாலைகளில் ஆற்றுகின்ற பணிகளுக்கு அப்பால் ஆள்கொல்லிநோயான கொரோனா நோயாளிகளுடன் பணிபுரிவது என்பது மிகவும் கடினமானதாகும். அந்தவகையில் மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பராமரிப்புத் தொழிலாளர்கள், காவலாளிகள், உணவு வழங்குபவர்கள் எனப் பல்வேறு தரப்பினர் நிறைவான சேவையை வழங்குகின்றார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். சாதாரணமான வைத்தியசாலைகளில் பணியாற்றும் போது பாதுகாப்பு, தொற்றுநோய் அச்சுறுத்தலின்றி பணியாற்ற முடியும். ஆனால் இங்கு அவ்வாறல்ல. மிகுந்த அர்ப்பணிப்புடன், சுயவிருப்பத்தோடு பணியாற்ற வேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்த வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற சகல பணிநிலை உத்தியோகத்தர்களது பங்களிப்பும் அர்ப்பணிப்பும் மாற்றுக் கருத்தின்றி போற்றுதற்குரியது.

(தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir

**CANE நிறுவனமானது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், புற்றுநோயாளர் பராமரிப்பு சேவைகள் போன்றவற்றில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தன்னார்வ சேவையை வழங்கி வருகின்றது. முற்றிலும் கொடையாளர்கள், நலன்விரும்பிகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் பங்களிப்பில் இந் நிறுவனம் இயங்கி வருகின்றது. தமது செயற்பாடு குறித்து அந்நிறுவனம் தரும் தகவல்கள் இவை.**




# வடக்கு, கிழக்கில் புற்றுநோயாளருக்கு அரும்பணியாற்றும் CANE நிறுவனம்

புற்றுநோயானது உலகில் ஏற்படும் அதிகமான இறப்புகளுக்கான காரணிகளில் இரண்டாம் இடத்தை வகிக்கும் அதே நேரம் இலங்கையில் வைத்தியசாலைகளில் இடம்பெறும் இறப்புக்கான காரணிகளிலும் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. உலகளாவிய ரீதியில் 2018ஆம் ஆண்டு 96லட்சம் இறப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 2008ஆம் ஆண்டு 20,246 ஆகவும் 2014இல் 23,105 ஆகவும் அதிகரித்துள்ளது. இதே வேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வட மாகாணத்தில் 2010ஆம் ஆண்டு 445 ஆக இருந்த புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 2011ம் ஆண்டு 513 ஆக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்திலும் 2010ம் ஆண்டு 745 ஆக இருந்த புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 757 ஆக அதிகரித்துள்ளது.

வடகிழக்கில் புற்றுநோய் உருவாக்கம் அதிகரிப்பிற்கும் அதனை தடுப்பதற்கும் தடையாக நவீனத்துவமான ஆடம்பர வாழ்க்கைமுறை, இலாப நோக்கம் சமூகத்தில் உள்ள மூடநம்பிக்கைகள் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. வடகிழக்கில் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு பல்வேறு விதத்தில் மக்களை சென்றடைந்தாலும் முக்கியமாக கிராமம் மற்றும் பின்தங்கிய இடங்களில் உள்ள மக்களை சென்றடையாததாலும், விழிப்புணர்வு ஏற்படுத்திய மக்களை தொடர்ச்சியாக கண்காணிப்பு செய்ய முடியாததன்




காரணமாகவும் விழிப்புணர்வின் நன்மையை ஏற்படுத்த முடியவில்லை.

சந்தையில் அதிகரிக்கப்பட்டுள்ள அசேதன உணவுகள், சுவையூட்டிகள் மற்றும் நிறமூட்டிகள் பயன்படுத்தப்பட்ட உணவுகள் இலகுவாக நுகரக்கூடிய முறையில் அனுமதிக்கப்பட்டமையினாலும் மக்களின் நேர மட்டுப்பாடால் கூடிய நேரத்தினை பொருள்கள் கொள்வனவு செய்வதில் செலவழிக்க முடியாததாலும் புற்றுநோய் தாக்கமானது அதிகரிக்கின்றது.

தற்போது வடகிழக்கு மாகாணங்களில் உள்ள இளம் சமுதாயத்தினரது மது, புகைத்தல், போதைப் பொருள் பாவனை போன்ற பழக்கம் அவர்களின் வேலையின்மை, வேலையின்மையால் உருவாகும் அதிகரித்த ஓய்வு, அதிகரித்த பணப்புழக்கம், பெற்றோரின் கவனக்குறைபாடுகள் போன்றவற்றால் அதிகரிக்கின்றது. இச் செயற்பாடு மூலமும் புற்றுநோய்த் தாக்கமானது அதிகரிக்கின்றது.

அதிகரித்த தொழில்நுட்ப வசதி கிடைப்பதன் காரணமாக உடற்செயற்பாடுகள் குறைந்து இயந்திர பாவனை அதிகரிப்பு மற்றும் கொழுப்பு, துரித உணவுகள், இனிப்பு, குளிர்பானங்கள் என்பவற்றின் பாவனை அதிகரிப்பின் மூலம் ஏற்படும் உடற்பருமன் அதிகரிப்பு புற்றுநோய்க்கான மற்றுமொரு காரணியாக அமைகின்றன. போதிய சுகாதார மேற்பார்வையின்மையின் காரணமாக சுய பாதுகாப்பு அற்ற முறையில் ஊழியர்கள் புற்றுநோய் தாக்கத்துக்கு இலகுவாக உட்படுகின்றனர். உதாரணமாக வீதிகளில் வேலை செய்வோர், சுத்திகரிப்பு தொழிலாளர்கள், கட்டுமான தொழிலில் ஈடுபடுவோர், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள், கிருமி நாசினி விசிறுவோர் என்போர் முகக்கவசம் மற்றும் ஏனைய பாதுகாப்பு அங்கிகள் இன்றி வேலை செய்ய அனுமதித்தல்.

**சிகிச்சை வசதிகளும் இடைவெளிகளும்**

தெல்லிப்பழை பாதை புற்றுநோய் வைத்தியசாலை (Thellippalai Trail Cancer Hospital) புற்றுநோயாளர்களுக்கான ஒரேயொரு வைத்தியசாலையாக வட மாகாணத்தில் உள்ளது. போக்குவரத்து வசதி, பணவிரயம் என்பவற்றின் காரணமாக ஏனைய மாகாணங்களில் உள்ள மக்களும் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தருகின்றனர்.

**இறுதி பராமரிப்பு வசதிகளும் இடைவெளிகளும்**

வடகிழக்கு மாகாணங்களில் போரின் காரணமாக ஏற்பட்ட புலம்பெயர்வு, இழப்புக்கள் என்பன இங்கு வாழும் மக்களிடம் குடும்ப ஆதரவின்மை, தனிமை என்பவற்றை உருவாக்கியுள்ளன. இக் குடும்ப சூழலில் உள்ள மக்களுக்கு புற்றுநோய் ஏற்பட்டால் அவர்களின் வாழ்க்கைத்தரம் முழுமையாக பராமரிப்பு இன்றி பாதிக்கப்படுவதுடன் இறுதி பராமரிப்பு கேள்விக்குறியாகின்றது. இந் நிலைமையை குறைப்பதற்காக புற்றுநோய் காப்பகமான CANE காப்பகம் ஆரம்பிக்கப்பட்டது.

CANE (Cancer Aid North/ East Srilanka) நிறுவனம் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள புற்று நோயாளர்களுக்கு சேவைகளை ஆரம்பித்ததோடு 2006ஆம் ஆண்டில் இருந்து "கேன்" தொண்டு நிறுவனமானது எல்லா மாகாணங்களையும் உள்ளடக்கிய அனைத்து மக்களுக்கான இலவச சேவைகளை வழங்கி வருகின்றது.

**கேனின் சேவைகள்**

இலவச தங்குமிட சேவை வழங்குதல். இலவச ஆரோக்கியமான உணவு வழங்கல் இலவச மருத்துவ சேவைகளை வழங்குதல். இலவச போக்குவரத்து சேவைகளை வழங்குதல். நோயாளர்களுக்கான தரமான சேவையை பயிற்சி பெற்ற அனுபவம் வாய்ந்த சேவையாளர்களைக் கொண்டு வழங்குதல்.

புற்றுநோய் சம்பந்தமான பரிசோதனை செய்வதற்கு வசதியற்று வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களுக்கு வைத்திய நிபுணரின் சிபார்சின் அடிப்படையில் பரிசோதனை செலவுகளை பொறுப்பெடுத்தல்.

கேன் நிறுவனமானது மட்டக்களப்பு புற்றுநோய் சங்கத்துக்கு ஊடாக மஹரகம வைத்தியசாலையில் சிறுவர் புற்று நோய்க்கு சிகிச்சை பெறுபவர்களுக்கு நிதி வசதியை வழங்குகிறது.

**கேன் நிறுவனத்தின் வேறு சேவைகள்.**

தாதியர் மற்றும் பராமரிப்பு கற்கைநெறியை தொடர இருக்கும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல் கேன் நிறுவனமானது வீடுகளில் தங்கியிருக்கும் புற்றுநோயாளர்களிடம் விஜயம் செய்து அவர்களுக்கு இலவச வைத்திய ஆலோசனை மற்றும் பராமரிப்பு சேவையை வழங்குதல். புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளை இலவசமாக நடாத்துதல். இக் காப்பகத்தின் மூலம் எதிர்காலத்தின் திட்டமிடப்பட்டுள்ள சேவைகள்

1. வாய், மார்பு, கற்பப்பை புற்றுநோய்களுக்கான ஆரம்ப பரிசோதனையை தொடங்குதல்.

2. இறுதிப் பராமரிப்பிற்குரிய காப்பகமாக முழுமையாக மாற்றுதல்.

3. இக் காப்பகத்தின் சேவையை மேம்படுத்தி புற்றுநோயாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்துவதற்கும் புற்றுநோயைத் தடுப்பதற்கும் மக்களின் ஆதரவு மிகவும் முக்கியமாக உள்ளது.

மேற்படி சேவைகளை மேலும் சிறப்பாக வழங்குவதற்கு CANE நிறுவனம் தனது நிதி ஆதாரத்தை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

**மதிப்புக்குரிய கொடையாளருக்கு!**

உங்களின் பிறந்த நாளின் போதோ, அல்லது அன்புக்குரியவர்களின் நினைவு நாள்களின் போதோ, அல்லது திருமண நினைவு நாள்களின் போதோ, புற்று நோயாளர் காப்பகத்தில் தங்கியிருக்கும் நோயாளர்களின் ஒரு நாளுக்குரிய உணவு மருத்துவ செலவுகளை பொறுப்பெடுத்து இந் நோயார்களின் உடல் உள விருத்திக்கு உதவி செய்யலாம் அல்லவா?

விரும்பியவர்கள் எம்முடன் நேரடியாக 021 224 0258 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

அல்லது HNB வங்கியின் BOARD OF MANAGEMENT CANE என்ற பின்வரும் கணக்கிலக்கத்திற்கோ 016010008602 உங்கள் பங்களிப்பை வைப்பில் இடலாம்.

இவ்விடயத்தில் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவித்து எமது மனித நேயப் பணிக்கு பங்களிக்குமாறு வேண்டுகிறோம்.

# புதிய அரசியல் கலாசாரம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து



நாட்டில் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை ஸ்தாபிக்க வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

சிலரின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் பொதுமக்கள் அரசியல்வாதிகள் இல்லாத ஒரு நாட்டை கோருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், கட்சிகளை மாற்றும்போது மாறாத நீண்ட கால தேசிய கொள்கை கட்டமைப்பை உருவாக்க வேண்டும் எனக் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்தமை காரணமாக நகராட்சி மன்றங்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் 69 உறுப்பினர்கள் அண்மையில் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவர்களுக்குப் பதிலாக புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் பரவியுள்ள கொவிட் வகைகள் தொடர்பாக ஆய்வுகள்



இலங்கையில் பரவியுள்ள கொரோனா வகைகள் தொடர்பாக ஆய்வு செய்வதற்கான மரபணு பகுப்பாய்வு ஆராய்ச்சி நடவடிக்கைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொற்றுநோயியல் பிரிவின் ஊடாக வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆராய்ச்சியின் முடிவுகளை 7 நாள்களுக்குள் வழங்க எதிர்பார்த்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவில் வேகமாகப் பரவி வரும் டெல்டா வைரஸ் இலங்கையிலும் இனங்காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவ்வாறு இனங்காணப்பட்ட பகுதிகளில் டெல்டா வைரஸ் வேகமாகப் பரவி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கொவிட்

யாழ். வடமராட்சி, நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகடந்தஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்று மாதிரிகளை வழங்கியுள்ளார்.

அவற்றில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை நாட்டில் பரவி வரும் கொவிட் வைரஸ் திரிவுகளின் மரபனு பகுப்பாய்வு நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின்மருத்துவபீடத்தின்ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் பிரிவு இந்தச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 26 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி முதல் டோஸ் செலுத்தப்பட்டது

இலங்கையில் இதுவரை 26 லட்சத்து 32 ஆயிரத்து 558 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் 29 ஆயிரத்து 327 பேருக்கு சீனாவின்சினோபோர்ம்தடுப்பூசியின்முதலாவதுடோஸ்செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, நாட்டில் 15 லட்சத்து 65 ஆயிரத்து 521 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஞாயிறு 20 ஆயிரத்து 345 பேருக்கு செலுத்தப்பட்டது.

இதனையடுத்து 5 லட்சத்து 13 ஆயிரத்து 195 பேருக்கு இதுவரையில் சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 3 லட்சத்து 72 ஆயிரத்து 899 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டது.

# ஆபத்தான நாடுகளின் வரிசையில் இலங்கை

உலகப் புகழ்பெற்ற தரப்படுத்தல் நிறுவனமான ஸ்டேடட் என்ட் புவர்ஸ் நிறுவனத்தின் தரப்படுத்தலுக்கு அமைய இலங்கை பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த முடியாத ஆபத்தான நாடுகள் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கை ஏற்கனவே சிசிசி பிளஸ் தரத்தில் இருப்பதுடன் தற்போதைய தரப்படுத்தலுக்கு அமைய மேலும் கீழ் நோக்கித் தள்ளப்பட்டுள்ளது.

இந்த தரப்படுத்தல் பட்டியலில் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ள நாடுகளே இடம்பெற்றுள்ளன.

இலங்கை இடம்பெற்றுள்ள தரப்படுத்தல் பட்டியலில் இருக்கும் ஏனைய நாடுகள் ஆபிரிக்க நாடுகள் என்பது முக்கியமானது.

# இளம் தொழில் முயற்சியாளர் நில ஒதுக்கீடு திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் 4 லட்சத்து 35 ஆயிரம் நிலங்கள் விநியோகம்

கொழும்பு, ஜூன் 29

இளம் தொழில் முயற்சியாளருக்கான நில ஒதுக்கீடு திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் 4 லட்சத்து 35 ஆயிரம் நிலங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சுமார் 5 லட்சம் பேர் இந்த நிலத்துக்கு விண்ணப்பித்துள்ளனர் என நில அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ. ஏ.கே. ரணவக்கா கூறியுள்ளார்.

தற்போதுள்ள பயன்படுத்தப்படாத நிலங்களை அடையாளம் கண்டு மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு வர்த்தக நிலையங்கள் திறப்பதற்கு நேற்று முதல் அனுமதி

மட்டக்களப்பிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் நேற்று (திங்கட்கிழமை) காலையில் இருந்து மாலை 9 மணிவரை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஆலயங்கள் மற்றும் அனைத்து மதஸ்தானங்களில் ஆராதனைகள், உற்சவங்கள் இடம்பெறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தடுப்பு செயலணியுடன் இடம்பெற்ற கலந்துரையடல் தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே கணவதிப்பிள்ளை கருணாகரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின்படி எந்தவிதமான ஆலய உற்சவங்கள் மற்றும் விழாக்கள் ஆகியவை இடம்பெறத் தடை விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நடைமுறை சுகாதார அமைச்சால், சுற்றறிக்கை மறுபரிசீலனை செய்யும் வரை நடைமுறையில் இருக்கும்.

இதேவேளை நேற்றுக் காலையில் இருந்து மாலை 9 மணிவரை அனைத்து வர்த்தக நிலையங்களும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி 9 மணிக்கு பின்னர் திறந்திருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




மேலும் வர்த்தக உரிமையாளர்கள் வர்தக நிலையம் திறந்திருக்கும் நேரம் கண்டிப்பாக சுகாதார அறிவுறுத்தலைப் பேணி, நுகர்வேரை அதிகமாக உள்வாங்காது முகக்கவசம் கண்டிப்பாக அணிந்திருக்கவேண்டும் என்பதுடன் கை கழுவுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும்.

இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளாத வர்த்தகநிலைய உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். – என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# பொது நிகழ்வில் முகக்கவசம் இன்றி கலந்துகொண்டார் வடக்கு ஆளுநர்!

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், முகக்கவசம் அணியாமல் பொது நிகழ்வுகளில் கலந்துகொண்டமைக்கு பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தார்.



இதன்போது குறித்த நிகழ்வுகள் சிலவற்றில் பங்கேற்றிருந்த வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதமை பலராலும் அவதானிக்கக் கூடியதாக இருந்துள்ளது.

நாட்டில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் முகக்கவசங்களை சரியான முறையில் அணியாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் பொது நிகழ்வொன்றில் முகக்கவசம் அணியாது கலந்து கொண்டுள்ளார்.

இந்த விடயத்தில் அவருக்கு எதிராக பொலிஸாரோ சுகாதாரப் பிரிவினரே எவ்வித நடவடிக்கையும் எடுக்காதமைக்கு பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 428 பேர் சிக்கினார்கள்

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதி முறைகளை மீறிய குற்றச் சாட்டில் மேலும் 428 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் இது வரை கைது செய்யப்பட்டடோரின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 644ஆக அதிகரித்துள்ளது.

# சிறையிலுள்ள அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்க!

## ஜனாதிபதியிடம் சார்ள்ஸ் எம்.பி. கோரிக்கை



நீதிமன்ற விசாரணையில் உள்ள அரசியல் கைதிகள், நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ள அரசியல் கைதிகள், இன்னும் வழக்குத் தாக்கல் செய்யாத அரசியல் கைதிகள் என அனைத்து அரசியல் கைதிகளையும் மிக விரைவில் விடுதலை செய்ய அரசு துரித நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள தமது அலுவலகத்தில் இன்று காலை நடத்திய ஊடக சந்திப்பின் போது கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 24ஆம் திகதி பொசன் தினத்தை முன்னிட்டு நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அரசியல் கைதிகள் 16 பேரை விடுதலை செய்துள்ளார்.

குறித்த 16 நபர்களும் ஏற்கனவே நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டு இன்னும் குறுகிய காலத்தில் தங்களுடைய தண்டனைகே காலத்தை நிறைவு செய்து வெளியில் வர இருந்தார்கள்.

குறிப்பாக அதில் இரண்டு பேர் மாத்திரமே 4 வருடம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியவர்கள். ஏனைய 14 பேரும் ஒருவருடத்துக்குள் சிறையிலிருந்து வெளிவர இருந்த வேளையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், அரசியல் கைதிகள் அனைவரையும் மிக விரைவில் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் நான் முன்வைக்கின்றேன்.

குறித்த அரசியல் கைதிகளோடு சேர்த்து தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு அரசியல் பிரமுகரான மரணதண்டனைக் கைதி ஒருவரையும் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார்.

குறித்த மரணதண்டனைக் கைதியின் விடுதலையை ஐ.நா. அமெரிக்க செயலகங்கள் எதிர்த்துள்ளன. சட்டத்தரணிகள் கூட குறித்த அரசியல் பிரமுகரின் விடுதலைக்கு ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஏற்கனவே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மிருசுவில் பகுதியில் பொதுமக்களைப் படுகொலை செய்த குற்றவாளியான இராணுவ அதிகாரியை விடுதலை செய்திருந்தார்.

எனவே, ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி இன்னும் சிறையில் இருக்கும் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

இந்தப் புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு, சமூக வலைத்தளங்களில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செய்திகள் பிரசுரித்தார்கள் என்னும் குற்றச்சாட்டில் பலரைப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்திருந் தது. அவர்களையும் ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும்.


இதேவேளை, நாட்டில் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெறுவது கண்டிக்கத்தக்க விடயம் என்பதை நான் இங்கு பதிவு செய்கின்றேன்.

குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பாதிப்புக்களை சிங்கள மக்கள் இப்போதுதான் உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஏனெனில் தென்பகுதியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரசை எதிர்க்கின்றவர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த அரசு கைதுசெய்து வருகின்றது.

அந்தவகையில் தற்போதுதான் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் எவ்வளவு பாதகமானது என்பதை தென்பகுதி சிங்கள மக்கள் உணர்ந்துள்ளார்கள்- என்றார்.

# கொழும்பில் மேலும் ஒருவர் 'டெல்டா'வுடன் அடையாளம்

## இதுவரை 8 பேருக்குத் தொற்று உறுதி



ஆபத்தான 'டெல்டா' கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் ஒருவர், கொழும்பு மாவட்டத்திலுள்ள கஹதுடுவ பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயது நபரே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்று கஹதுடுவ பொது சுகாதார வைத்திய அதிகாரி தனுக பத்மராஜ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக இலங்கையில் 'டெல்டா' வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 8ஆக உயர்வடைந்துள்ளது.

மேற்படி நபர் கொழும்பு, கொம்பனி வீதியிலுள்ள பிரதான கட்டுமானத் தளமொன்றில் பணியாற்றி வருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், சிகிச்சைக்காக குறித்த நபர் பொலனறுவை கொரோனாச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அவரது மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட 50 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# அமைச்சுப் பதவியை நான் கோரவில்லை

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பதில்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்ச ரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என இன்று சில ஊடகங்களில் செய்தி வெளியான நிலையில் அதனை அவர் மறுத்துள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரத்தியேகச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு எதிர்வரும் நாள்களில் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும், அந்தச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை.



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனக்கு அமைச்சுப் பதவி அல்லது வேறு எந்தப் பதவியாது வழங்குமாறு அரசிடம் எவ் விதக் கோரிக்கையும் முன்வைக்க வில்லை - என்றுள்ளது.

# மணிக்கு எதிராக முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாண மாநகர மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் சபையில் இருந்து தன்னை வெளியேற்ற எடுத்த தீர்மானத்துக்கு எதிராக வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில் மாநகர சபை உறுப்பினர் ஜெ.ரஜீவ் காந்த் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதியன்று நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வில், மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்பன் உள்ளிட்ட வர்களுக்கும் ரஜீவ் காந்துக்கும் இடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தின் போது 'நாய்' என விழித்து பேசியதான குற்றச்சாட்டில் மாநகர சபை உறுப்பினர் ஜெ.ரஜீவ்காந்த், ஒரு மாத காலத்துக்கு சபை அமர்வில் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனக்கு விதிக்கப் பட்ட தடை சட்ட முரணானது எனக் குறிப்பிட்டு, வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் உள்ளூராட்சி ஆணையாளரிடம் மாநகர சபை உறுப்பினர் ஜெ.ரஜீவ் காந்த், மேயருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

45 உறுப்பினர்களைக் கொண்ட மாநகர சபையில் வாக்கெடுப்பு இடம் பெற்ற வேளை அந்த முடிவுக்கு சபையில் 23 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர். 12 உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்திருந்தனர். சபை நடவடிக்கையில் இருந்து நீக்கக் கூடாது என இரு உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

# இந்திய மீனவர்களாலும் 'டெல்டா' பரவும் ஆபத்து!

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி எச்சரிக்கை

மனிதனை மூச்சுத்திணற வைத்துக் கொல்லும் டெல்டா கொரோனா வைரஸ், இலங்கையில் விமான நிலையங்கள் மூலமாக மட்டுமன்றி வடபகுதியில் இந்திய மீனவர்கள் ஊடாகவும் மேலும் பரவக்கூடும். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதியில் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

-இவ்வாறு வலியுறுத்தினார் தொற்று நோய்கள் மற்றும் கொரோனா கட்டுப் பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண் டோபுள்ளே.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் பெருந்தொற்றாக உருவெடுத்த டெல்டா கொரோனா வைரஸ் இன்று இலங்கை உள்ளிட்ட 85 நாடுகளுக்குப் பரவியுள்ளது.

இந்த வைரஸ் தொற்றை ஆரம்பத்திலேயே நாம் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் இலங்கை முழுவதும் இந்த வைரஸ் பரவக் கூடும்.

அப்படியான நிலைமை ஏற்பட்டால் நாளாந்தம் ஆயிரக்கணக்காணக் கான உயிரிழப்புகள் இங்கு பதிவாகும். இந்தியா போன்று இலங்கையிலும் பிணங்கள்தான் குவியும்.

பேராபத்துமிக்க இந்த டெல்டா வைரஸ் தொற்று தொடர்பில் இலங்கை மக்கள் அலட்சியமாக இருக்கக்கூடாது.

வடபகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. அவர்கள் ஊடாகவும் டெல்டா வைரஸ் இலங்கையில் மேலும் பரவக்கூடும். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதியில் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்களுடன் தொடர்பு வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும் - என்றார்.

# மேலும் சில பிரதேசங்கள் இன்று தொடக்கம் முடக்கம்

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக இரண்டு மாவட்டங்களில் சில பிரதேசங்கள் இன்று காலை முதல் தனி மைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொரகல்ல கிராம சேவகர் பிரிவின் நொரகல்ல மேல் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புச் செயலணி தெரிவித்துள்ளது.

அத்துடன் அந்த மாவட்டத்தில் யக்தெஹிவத்த கிராம சேவகர் பிரிவின் பின்கந்த 1 மற்றும் பின்கந்த 2 ஆகிய பகுதிகளும், பாதகட கிராம சேவகர் பிரிவின் பின்கந்த 3 பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மொனராகலை மாவட்டத்தின் ஹிதிக்வுல பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நக்கலவத்த கிராமம் மற்றும் மில்லகெலே வத்த கிராமங்கள் தனி மைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.